பக்கங்கள் : பதின்நான்கு

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 23 வியாழக்கிழமை (05.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 191

# தெஹிவளைப் பகுதியில் ரயில் பாதையில் குண்டுவெடிப்பு; 18 பேர் வரை காயம்

## கண நேர தாமதத்தால் பேரனர்த்தம் தவிர்ப்பு

கொழும்பு,ஜூன் 05

**கொழும்பு,தெஹிவளையில் ரயில் தண்டவாளத்தில் நேற்றுக்காலை பெரும் வெடிகுண்டு ஒன்று வெடித்ததில் ரயில் பயணிகள் உட்பட 18 பேர் காயமடைந்தனர்.**

**சுமார் ஆயிரத்து ஐந்நூறு பயணிகளுடன் சென்று கொண்டிருந்த ரயில் ஒன்று அவ்விடத்தைக் கடந்து சென்ற கணத்தின் பின்னர் அந்த வெடிகுண்டு வெடித்ததால் பேரனர்த்தம் தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.**

தெஹிவளைக்கும், வெள்ளவத்தைக்கும் இடையில், வாசல வீதிக்கு அண்மையாக நேற்றுக்காலை 7.10 மணியளவில் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

பாணந்துறையிலிருந்து மருதானை நோக்கிச்சென்று கொண்டிருந்த அலுவலகப் பயணிகளுக்கான காலை ரயில், மேற்படி பகுதியில் ஒரு தண்டவாளப் பாதையில் கடந்து சென்ற மறுகணம், பக்கத்துத் தண்டவாளத்தில் இக்குண்டு வெடித்திருக்கின்றது.

இதனால் அந்தத் தாண்டிச்சென்ற ரயிலில் பயணித்தவர்கள் - குறிப்பாக ரயில் பெட்டிகளின் வாசல்களில் தொங்கிக் கொண்டு பயணித்தவர்கள் - காயமுற்றனர்.

குண்டு வெடித்த ரயில் பாதையில், குண்டு வெடிப்பினால் தண்டவாளம் இரண்டாகப் பிளந்து கிடந்தது.

அதிர்ஷ்டவசமாக அந்தத் தடத்தில் ரயில் பயணிக்காமல், அருகில் இருந்த தடத்தில் சென்றதாலும், அந்த ரயில் அப்பிரதேசத்தைக் கடந்த கணத்தின் பின்னரே குண்டு வெடித்ததாலும் பேரனர்த்தம் தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமுற்றவர்களில் 15 ஆண்களும், மூன்று பெண்களும் அடங்குவர் என்றும்,

(14ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளம் வடிகிறது!

கொழும்பு, ஜூன் 05

நாட்டின் பல பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக கொட்டித் தீர்த்துப் பாரிய அனர்த்தத்தை ஏற்படுத்திய மழை நேற்றுக் குறைவடைந்தது. அதை அடுத்து இதுவரை நீரில் மூழ்கிக் கிடந்த பகுதிகளில் வெள்ளம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தம் அவசரம் தேவை

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவில் 'ஓ நெக்ரிவ்' 'ஏ நெக்ரிவ்' இரத்த வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குருதிக் கொடையாளர்கள் உடன் தொடர்பு கொண்டு இரத்த தானம் செய்யு மாறு இரத்தவங்கியின் பதில் பொறுப்பு வைத்திய அதிகாரி சி.குமாரவேள் கேட்டுள்ளார்.

## நாடாளுமன்ற அமர்வு இன்று ஆரம்பமாகிறது

கொழும்பு, ஜூன் 05

மே மாதம் ஆறாம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திடீரென இடைநிறுத்தப்பட்ட நாடாளுமன்றம் மீண்டும் இன்று கூடுகிறது.

ஆனால், நாடாளுமன்றின் இந்த அமர்வை ஜனாதிபதி தொடக்கிவைக்கமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டாரவின் தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு கூடும் நாடாளுமன்றில் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும். வழமைபோல் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவே பிரேரணையைச் சமர்ப்பித்து

(14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணசபையின் முதலாவது அமர்வு நேற்றுத் திருகோணமலையில் நடைபெற்றது

கொழும்பு, ஜூன் 05

கிழக்கு மாகாணசபையின் முதலாவது அமர்வுநேற்றுமுற்பகல்10மணிக்கு திருகோணமலையில் நடைபெற்றது.

இதன்போது தேசியக் கொடியியை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஏற்றிவைத்தார்.

கிழக்கு மாகாணக் கொடியை கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களின் தலைவர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடியில் நேற்றும் அசாதாரண நிலை நீடிப்பு

கொழும்பு, ஜூன் 05

காத்தான்குடியில் அசாதாரண நிலைமை மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. நேற்றும் நகரில் கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. தினப்பணிகள் ஸ்தம்பித்திருந்தன.

ஆனால், காத்தான்குடி ஊடான வாகனப் போக்குவரத்து மாத்திரம் பொலிஸ் பாதுகாப்போடு இடம்பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை காத்தான்குடியைச் சேர்ந்த முஸ்லிம் வியாபாரி ஒருவர் மட்டக்களப்புகல்லடியில்வைத்து வெட்டிக் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து காத்தான்குடியில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீம், ஹஸனலி, பஷீர் உட்பட 15 பேர் ரணில் முன்னிலையில் சத்தியப்பிரமாணம்

கொழும்பு, ஜூன் 05

ஐ.தே.கட்சி - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டமைப்பின் சார்பில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பதினைந்து உறுப்பினர்களும் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து உறுப்பினர் பதவியை ஏற்றுக் கொண்டனர்.

நேற்றுத் திருகோணமலையில் இடம்பெற்ற கிழக்கு மாகாண சபையின் அங்குரார்ப்பண அமர்வைப் பகிஷ்கரித்தே அவர்கள் கொழும்பில் சத்தியப்பிரமாண நிகழ்வில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் தாக்குதலில் படைக்குப் பேரிழப்பு - புலிகள் வான்தாக்குதலில் ஆட்லறித் தளம் நாசம் - படையினர்

யாழ்ப்பாணம், ஜூன் 5

எழுதுமட்டுவாள் இராணுவத்தளம் மீது மோட்டார் தாக்குதலை நடத்தி படையினருக்கு பேரழிவை ஏற்படுத்தி இருப்பதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை - பூநகரியில் உள்ள புலிகளின் ஆட்லறித் தளங்கள் மீது விமானத் தாக்குதலை நடத்தி அவற்றை அழித்ததாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

**புலிகள் தரப்புத் தகவல்:**

முகமாலைக் களத்தின் முதன்மைப் பின்தளமாக உள்ள எழுதுமட்டுவாள் படைத் தளம் மற்றும் மோட்டார் ஷெல் ஏவும் தளம் ஆகியன மீது விடுதலைப் புலிகள் குறி வைத்து செறிவான ஷெல் தாக்குதலை முற்பகல் 10 மணிதொடக்கம் நடத்தினர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## 'இஸற்' வெட்டுப் புள்ளி வெளியானது இம் முறை பல்கலைக்கு 20,203 பேர்

யாழ்ப்பாணம், ஜூன் 5

கடந்த வருடம் ஓகஸ்ட்டில் நடைபெற்ற ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறு பேறுகளின்படி பல்கலைக்கழகங்களுக்கு மாண வர்களை அனுமதிப்பதற்கான 'இஸற்' வெட்டுப் புள்ளி நேற்றுப் பிற்பகல் வெளியானது.

இம்முறை வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் சகல பல்கலைக்கழகங்களுக்கும் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக் கப்பட்டு அது 20 ஆயிரத்து203 என்று தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் பல்கலைக்கழகத்துக்கு 19ஆயிரத்து 650 மாணவர்களை சேர்த்துக் கொள்வதென முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்னர் அழகியல் பாடங்களுக்கு 390 மாணவர்களையும் ஏனைய விசேட பாடங்களுக்கு ஆயிரத்து 100 மாணவர்களையும் மேலதிகமாக சேர்த்துக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'இஸற்' வெட்டுப் புள்ளி வெளியானதை அடுத்து பேராதனை, மொரட்டுவ, களனி மற்றும் சப்பிரமுவ போன்ற பல்கலைக் கழகங்கள் மிக விரைவில் புதிய மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்க உள்ளதாக அறிவித்துள்ளன.

நேற்று வெளியான 'இஸற்' வெட்டுப் புள்ளியின் படி மருத்துவத் துறைக்கு ஆகக் கூடிய புள்ளி கொழும்பு மாவட்டத்திலும் (1.9910) ஆகக்குறைந்த புள்ளி முல்லைத் தீவிலும் (0.8039) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-02)

(14ஆம் பக்கமும் பார்க்கவும்)

## போக்குவரத்தும் நடமாட்டமும் வன்னியில் பெரிதும் முடக்கம்!

### மன்னார், வவுனியாவில் நிச்சயமற்ற நிலை

கொழும்பு, ஜூன் 05

பாதுகாப்பு நிலைமை மோசமடைவதன் காரணமாக வன்னியில் பொதுவான நடமாட்டமும் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளன என இலங்கையில் செயற்படும் ஐக்கிய நாடுகள் மற்றும் முக்கிய அரசசார்பற்ற அமைப்புகள் தெரிவித்துள்ளன.

மன்னார்ப் பகுதியிலிருந்து மக்கள் இந்தியாவிற்கும் கிளிநொச்சிக்கும் இடம்பெயர்ந்து வருகின்றனர் எனமனிதநேய அமைப்புகளின் குழு தனது வாராந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பாதுகாப்பு நிலைவரம் மோசம் அடைவதன் காரணமாக வன்னியில் பொதுவான நடமாட்டமும் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

மாந்தை மேற்குப் பகுதியில் தொடரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக 814 குடும்பங்களைச் சேர்ந்த 3,230 பேர் துணுக்காய் உதவி அரச அதிபர் பிரிவில் - உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாக - பதிவு செய்துள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி முருகேசு மங்களேஸ்வரி



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு மங்களேஸ்வரி நேற்று (04.06.2008) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகேசு அவர்களின் அன்பு மனைவியும் அருளம்மா, பரமேஸ்வரி (அமரர்) ஆகியோரின் அன்புத் தங்கையும் சபாநாதன் (கொழும்பு) அவர்களின் அன்பு அக்காவும் ஜெகதீஸ்வரி (றாதா),அருணகிரிநாதன் (பாபு) அவர்களின் அன்பு அம்மாவும் சிறீசிவகுமார் (C.T.B) அவர்களின் அன்பு மாமியாரும் தர்சிகா, தயானி, ஸ்ரீஜெனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2008) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனகசபாபதி
அருணகிரிநாதன் (மகன்)

*துரை வீதி,*
*தாவடி வடக்கு. கொக்குவில்*

## திருமதி அன்னலட்சுமி மார்க்கண்டு



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலட்சுமி மார்க்கண்டு நேற்று (04.06.2008) புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னாச்சி தம்பதியினரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவபாக்கியம், காலஞ்சென்ற சுப்பிரமணியம், வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவஞானவதி, சிவகுமார், சிவானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசரெத்தினம், சாந்தினி, சிவகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜனார்தனி, ஜனகோபன், ஜலதாரிணி, ஜெயகபில், ஆரணன், அனார்த்தன், அனு, லாவணியா, லவின் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (05.06.2008) மு.ப1 மணியளவில் அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.இராசரத்தினம்
(மருமகன்)

*185 , நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

# மரண அறிவித்தல்கள்

## யோகரத்தினம் கீதன்

இன்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் நாளை (06.06.2008) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் 10.00 மணியளவில் நடைபெறும் என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
யோகரத்தினம் (தந்தை)

*18/1 காட்டுக்கந்தோர் ஒழுங்கை*
*கச்சேரியடி. தொ.பே: 021 222 5503*

## கா.த.வேலாயுதபிள்ளை



வேலணை இலந்தைவனம் சித்தி விநாயகர் ஆலய அறங்காவலரும் முன்னாள் காலி புகையிலை வர்த்தகருமாகிய கா.த. வேலாயுதபிள்ளை அவர்கள் (04.06.2008) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பாப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் நாகம்மா, சண்முகராசா ஆகியோரின் சகோதரரும் நாகரத்தினம்மாவின் அன்புக் கணவரும் கௌரியம்பிகையின் அன்புத் தந்தையும் மதியழகனின் அன்பு மாமனாரும் வேணுப்பிரியா, திவ்வியா, ரஜீகரன், கஜனிகா ஆகியோரின் அன்புப் பேரனும் தம்பையா வரதலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பால சரஸ்வதி மனோகரன் காலஞ்சென்ற நாகேஸ்வரி,மங்கையர்க்கரசி ஆகியோரின் மாமனாரும் நிர்மலாதேவி தனலட்சுமி, சிவலட்சுமி, கௌரி ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 05.06.2008 மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சரவணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அன்புத் துணைவி வே.நாகரத்தினம்மா
*வேலணை, வடக்கு வேலணை.*

# 16 வது ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் துரை தெய்வேந்திரம்

*திதி: 05.06.2008*

தரணியில் எம்மை ஆளாக்கிய தெய்வமே எம்மைவிட்டுப் பிரிந்து 16 ஆண்டுகள் சென்றாலும் எம் உள்ளத்தில் என்றும் நிலைத்திருப்பீர்.

*109A ,நாயன்மார் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்.

# இதய அஞ்சலி

## யோ.கீதன்



31.05.2008 அன்று
அகால மரணமடைந்த
எமது சகதோழன்
யோ.கீதன்
அவர்களின் பிரிவால்
துயருறும் அவரின்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

**UK வாழ் நண்பர்கள்.**

# கண்ணீர் அஞ்சலி



## யோ.கீதன்

Bossa Bossa என எமை நீ
உரிமையோடழைத்து
எங்கள் உயர்வில் நீதோள்
கொடுத்து ஆருயிர்
நண்பனாக, சகோதரனாக,
எம்மோடிருந்தாயே!
உன் தொலைபேசி
அழைப்பை நாம்
எதிர்பார்த்திருக்க இடியென வந்ததே அச்செய்தி
எம் நம்பிக்கையை பொய்யாக்கி எங்கடா
சென்றாய் – உன் நினைவுகளை எம் நெஞ்சில்
சுமந்தபடி இங்கு கண்ணீரோடு நாம்.

**Best Friends - Singapore**

# DEEPEST SYMPATHIES

we extend our
deepest sympathy
to the family
members of late
**Mr. Keethan**
who passed away
on 31st may,2008.
May his soul rest in peace.



**Tafe Management-Malaysia.**

# DEEPEST SYMPATHIES



It was with a great sense of loss when we heard of Keethan's demise. We extend our heart felt sympathy to all his family members.

Let his soul rest in PEACE in the feet of ALMIGHTY.

**Management**
**FTMS Global- Singapore.**


50000 பிரதிகள் / ஒருவருட உத்தரவாதம்

12 மாதங்களுக்கு இலவச சேவை

பரீட்சிக்கப்பட்ட தரத்துடன் 4000 இற்கும் அதிகமாக ஏற்கனவே விற்பனையாகியுள்ளன

digital



SHARP

AR 5316 Photocopier

● PC Connectivity ● Scan Once Print Many (SOPM) ● 16 CPM ● 600X600 dpi (clear photocopy)

**Office Automation Division**
481,டி.பி.ஜயா மாவத்தை,
கொழும்பு-10

T : 2663444 F : 2694158
E : oasales@brownsgroup.com

உடன் விற்பனைத்
தொடர்புகளுக்கு
பியோ: 0777 447137

Browns


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# 'தவிச்ச முயல் அடிக்கும்' தந்திரோபாயம் இது!

'குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும்' பொறுப்பற்ற போக்கில் இந்தியா செயற்படுகின்றது என்று விசனப்படுகின்றார்கள் ஈழத் தமிழர்கள்.

தங்களது நியாயமான உரிமைகளுக்காகவும், கௌரவ வாழ்வுக்காகவும், தமது தாயக மண்ணில் - பாரம்பரிய பூமியில் - தமது இனத்தின் இருப்புக்காகவும் வாழ்வா, சாவா போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் தமிழர்கள்.

பாரத மாதாவைத் தமது பெரியன்னையாக வரித்து, மதித்துப் போற்றி வரும் ஈழத் தமிழர்களுக்காகக் குரல் எழுப்பி, அவர்தம் துயர் துடைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்தியாவுக்கு உண்டு.

ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத் தமிழர்களுக்கும் இடையிலான உறவு தொப்புள் கொடி இணைப்புப் போல தாய் - சேய் நேசம் கொண்டது. 'தானாடா விட்டாலும் தசை ஆடும் என்பார்கள்.' அது போல ஈழத் தமிழர்களுக்காக இந்தியா குரல் எழுப்பா விட்டாலும், தமிழகம் குரல் எழுப்பி, உதவ ஓடோடிவரும்; வரவேண்டும்.

ஆனால், யதார்த்தத்தில் தெனிலங்கைப் பேரினவாதத்தின் கொடூர அடக்குமுறையில் சிக்கி அவலப்படும் ஈழத் தமிழர்களுக்கு உதவ முன்வராத பாரதம், உபத்திரவம் செய்யத் துடியாய்த் துடிக்கின்றதோ என்ற சந்தேகம் - விசனம் - தமிழர் மனதில் எழுந்துள்ளது. அதைத் தமிழகம் பார்த்து வாளாவிருப்பது இன்னும் வேதனைக்குரியது.

ஒருபுறம் ஈழத் தமிழர்கள் மீது கொடூர யுத்த வெறிப் போக்கை வெளிப்படுத்தும் கொழும்பு நிர்வாகத்துக்கு ஆயுதத் தளபாடங்களை வாங்கிக் குவிக்க இந்தியா பெருந் தொகைக் கடனுதவி வழங்கி உதவுகின்றது. 'ராடர்' போன்ற கண்காணிப்பு ஆயுதங்களை விநியோகித்து ஒத்துழைக்கின்றது. படை அதிகாரிகளுக்கு விசேட பயிற்சியளித்து தமிழர் எதிர்ப்புப் போராட்டத்தில் கொழும்பின் கையை வலுப்படுத்துகின்றது.

அதேசமயம், மறுபுறம் தமிழர் தாயக மண்ணை ஆக்கிரமிக்கும் கொழும்பின் செயற்பாடுகளிலும் இந்தியா நேரடியாகப் பங்களிக்கின்றது என்ற குற்றச்சாட்டு இப்போது முன்வைக்கப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டம் சம்பூர் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்கள் காரணமாக சம்பூர்ப் பிரதேசத் தமிழ் மக்கள் - பல்லாயிரக் கணக்கில் - இடம் பெயர்ந்தனர். அவர்கள் இப்போது இடைத்தங்கல் முகாம்களில் அவல வாழ்வு வாழ்கின்றனர்.

பல நூற்றாண்டுகளாக - பல தலைமுறை தலைமுறைகளாக - சம்பூரில் தமிழர்கள் வசித்து வந்தார்கள். வரலாற்றுத் தொன்மையும் தமிழரின் பூர்வீகச் சிறப்பும் மிக்க பூமி அது.

அதனைத் தனது படை ஆக்கிரமிப்பு மூலம் கைப்பற்றிக் கபளீகரம் செய்த தென்னிலங்கை அரசுப் படைகள், சம்பூரையும் அதனை அண்டிய பிரதேசங்களையும் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவித்து, அப்பிரதேசத்தின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்கள் தமது இடங்களுக்குத் திரும்புவதற்கு நிரந்தரத் தடை போட்டுள்ளது.

சம்பூரில் தமிழர் தாயக மண் அரசின் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்ற மையத்துக்கான இலக்காகும் சூழல் இதனால் உருவாகியிருக்கின்றது.

இந்தப் பின்புலத்திலேயே -

தமிழரின் பூர்வீகத் தாயக மண்ணான சம்பூருக்குத் தமிழர்கள் இனித் திரும்பவே முடியாத வகையில் - ஓர் அரண் அமைக்கும் நோக்கத்தோடு - அங்கு அனல் மின் திட்டம் ஒன்றை உருவாக்க கொழும்பு நடவடிக்கை எடுத்து வருகிறது.

வளம் கொழிக்கும் தமிழர் தாயகத்திலிருந்து தமிழர்களை விரட்டியடிக்கும் இந்தக் கபட சதித் திட்டத்துக்கு முதுகு கொடுத்து உடந்தையாகும் செயலை இந்தியா முன்னெடுப்பதுதான் கேவலத்திலும் கேவலம்.

ஐம்பது கோடி அமெரிக்க டொலர் செலவில் இத்திட்டத்தை 2012 ஆம் ஆண்டுக்குள் பூர்த்தி செய்து, பல்லாயிரம் தமிழ்க் குடும்பங்களை சம்பூருக்கு - தமது தாயக பூமிக்கு - திரும்பி வரவே முடியாத கொடூரத்தை நிறைவேற்றிக் கொடுக்கப் போகிறாள் பாரத அன்னை.

இலங்கையில் ஓர் இனப்போர் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. ஐந்து தசாப்த காலமாக நீடித்த இனப்பிரச்சினை கொடூர உள்நாட்டுப் போராக இப்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது.

சம்பந்தப்பட்ட தரப்புகள் தங்களின் உரிமைகளுக்கான நியாயத்தை யுத்த களத்தில் உரசிப்பார்க்கும் நிலைமை நீடிக்கின்றது.

இந்நிலையில் ஆக்கிரமிப்புக்கும் அடிமைத்தனத்துக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கும் ஒரு சிறுபான்மை இனத்தின் - நலிவற்ற சமூகத்தின் - தாயக பூமியில் இருந்து அவர்களை விரட்டியடித்து விட்டு உள்ளூர் வளங்களைச் சூறையாடும் விதத்தில் அந்நிய சக்திகள் தலையிடுவது மிக மோசமான, நியாயப்படுத்த முடியாத, கேவல நடவடிக்கையாகும்.

மன்னாரை அண்டி, எண்ணெய் அகழ்வு என்ற பெயரிலும், திருகோணமலை சம்பூரில் அனல் மின்நிலையத் திட்டம் என்ற நாமத்திலும், புல்மோட்டையில் இல்மனைட் கனிவள அகழ்வு என்ற வடிவிலும் இந்த இக்கட்டுச் சமயத்தில் தமிழர் தாயக வளங்களைச் சூறையாடுவதும், அதில் அந்நிய நாடுகளும் சக்திகளும் தலையிடுவதும் 'தவித்த முயல் அடிக்கும்' வேலையாகவும் 'குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும்' காரியமாகவுமே அர்த்தப்படுத்தப்படக் கூடியவை.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் எப்போதுமே முறையற்ற விதத்தில் தலையிட்டு மூக்கறுபட்ட அனுபவத்தை ஏற்கனவே பெற்றுக்கெண்டுள்ள இந்தியா, இன்னும் அப்போக்கிலிருந்து மாறாமல் இருப்பது விசனத்துக்குரியது.

# போக்குவரத்துச் சபையின் 771,788 பஸ் சேவைகள் கடந்த சில தினங்களாக மிகவும் சீரற்ற நிலையில் !

## பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் 771 ஆம், 788 ஆம் இலக்கப் பாதைகளில் சேவையில் ஈடுபடும் காலை நேர பஸ் சேவைகள் கடந்த சில தினங்களாக இடம்பெறாமையால் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் எனப் பலரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்துச் சபையின் 771 ஆம், 778 ஆம் இலக்கப் பாதைகளில் காலை வேளையில் சேவையில் ஈடுபடும் பஸ்களில் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலரும் பயணம் செய்கின்றார்கள். யாழ்.நகரில் உள்ள பிரபல பாடசாலைகளுக்கும், மானிப்பாய், சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, இளவாலை ஆகிய இடங்களில் உள்ள பிரபல பாடசாலைகளுக்கும் சென்று வருவதற்கு மாணவர்களும், ஆசிரியர்களும் இந்த பஸ் சேவைகளையே நம்பியிருக்கின்றனர். அத்துடன் இப்பகுதிகளில் உள்ள அரச அலுவலகங்களுக்குச் செல்வதற்கு அரச ஊழியர்களும் இந்த பஸ்களில் பயணம் செய்கின்றனர்.

கடந்த வாரத்தில் புதன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களிலும் இவ்வாரத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை, நேற்றுப் புதன் கிழமை ஆகிய தினங்களிலும் இந்த பஸ் சேவைகள் இடம்பெறவில்லை. மாணவர்களில் பெரும்பாலானோர் பருவகாலச் சீட்டுக்களைப் பெற்றுள்ளனர். பஸ்சேவை இல்லாமையால் அவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் வீடு திரும்பினார்கள். இதனால் அவர்களது கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பருவகாலச் சீட்டைப் பெற்ற பணம் வீணடிக்கப்படுவதாகவும் மானிப்பாயைச் சேர்ந்த மாணவன் ஒருவனின் பெற்றோர் உதயனுக்கு நேற்றுத் தெரிவித்தனர். இது தொடர்பாக தாம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலைத் தொலைபேசி இலக்கமான 222-2207 இற்கு தொடர்பு கொண்டு கேட்டபோது பல்வேறு சாட்டுப்போக்குகள் கூறப்பட்டதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளிலும் , அரச ஊழியர்களின் பணியிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இந்தப் பிரச்சனை தொடர்பாக சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனச் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

(50)

# மாகாண சபை முறைமை ஓர் ஆரம்பமே உரிமைப் பிரச்சினைக்கு அது இறுதித் தீர்வல்ல

## சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 5

எமது அரசியல் உரிமைப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வொன்று எட்டப்பட வேண்டுமென்பதற்காகவே நாம் உழைத்து வருகின்றோம். அதற்கான ஓர் ஆரம்பமாகவே மாகாணசபை முறைமையை நாம் வலியுறுத்தி வந்துள்ளோம். அது இன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி இறுதித் தீர்வு நோக்கி நகர்வதற்குச் சாதகமான வழியை நாமே உருவாக்கிக் கொள்ள முன்வர வேண்டும்.

இவ்வாறு சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளார்.

நேற்று புதன்கிழமை யாழ். குடாநாட்டுப்பாடசாலைகளுக்கு முதற் கட்ட தளபாடங்கள் மற்றும் கற்றல் உபகரணங்களைக் கையளிக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குடாநாட்டின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் பல்வேறு செயற்திட்டங்களை தான் முன்னெடுத்து வருவதாகத் தெரிவித் துள்ள அமைச்சர் டக்ளஸ், சமுதாயத்தின் பொறுப்புமிக்க பிரமுகர்கள் என்ற வகையில் ஆசிரியர் சமூகமானது மாணவர்களைச் சரியான பாதைக்கு இட்டுச் செல்வதற்கான வழிகாட்டிகளாக இருக்க வேண்டுமென்றும் இவ்விடயம் தொடர்பில் மாணவர்களது பெற்றோர்களுக்கும் அறிவுறுத்த முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### யுத்தத்தை நிராகரித்து ஒலிக்க முன்வர வேண்டும்

குடாநாட்டில் திடீர் திடீரென பல் குழல்கள் முழங்கி வருவதை சுட்டிக் காட்டிய சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர், பல் குழல்கள் முழங்காதிருப்பதற்கு பல குரல்கள் யுத்தத்தை நிராகரித்து ஒலிப் பதற்கு முன்வரவேண்டும் என்றும் அப்போதுதான் எமக்கான அமைதி நிலையை உருவாக்கிக்கொள்ள இயலுமென்றும் தெரிவித்தார்.

சோறா, சுதந்திரமா என்றொரு நிலை முன்பு ஏற்பட்டிருந்த சமயம் சுதந்திரமே வேண்டுமென்று தாங்கள் போராட முன்வந்ததாகவும் அவ்வாறனதொரு தேவை அப்போது தலைதூக்கி இருந்தாகவும் உணர்த்திய அமைச்சர், ஆனால் இப்போது சோறுமின்றி சுதந்திரமுமின்றி எமது மக்கள் அல்லற் படுவதாகவும் தமிழ் மக்களின் தலைவர்கள் எனப் பலவந்தமாகத் தமைத் தாமே கூறிக்கொள்பவர்களே இதற்கு முக்கிய காரணமானவர்கள் என்றும் தெரிவித்தார்.

எமது மக்கள் தற்போது தள்ளப்பட்டுள்ள கஷ்ட நிலையில் இருந்து அம் மக்களை மீட்டெடுப்பதற்காகவே மாகாண சபையைத் தான் வலியுறுத்தி வந்துள்ளதாகவும் இது இறுதித் தீர்வல்ல என்றும் எமக்குரிய இறுதித் தீர்விற்கான ஆரம்பமே இந்த மாகாண சபை முறைமையாகும் என்றும் இதனை எம்மக்கள் தெளிவாகப்புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் டக்ளஸ் மேலும் தெரிவித்தார். (அ-50)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஜூன்.5

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற பெரு விளையாட்டுக்களில் வெற்றியீட்டிய வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான காட்சிப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்றைய காட்சிப் போட்டிகளில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விபரங்கள் வருமாறு:

கரப்பந்தாட்டம்

*19 வயதுப்பிரிவு பெண்கள்*

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை. எதிர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி.

*17 வயதுப்பிரிவு பெண்கள்*

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி. எதிர் சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்.

*17வயதுப்பிரிவு ஆண்கள்*

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

வலைப்பந்தாட்டம்

*15 வயதுப்பிரிவு பெண்கள்*

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி. எதிர் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

கபடி

*19 வயதுப்பிரிவு ஆண்கள்*

இணுவில் மத்திய கல்லூரி. எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

மேற்படி அணிகள் அடுத்த வாரம் ஹெனியாவில் இடம் பெறவுள்ள மாகாணப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (50-86)

## மெய்வன்மைப் போட்டிகள்

இலங்கை சாரணர் சங்க கிளிநொச்சி- தென்மராட்சி மாவட்ட சாரணர் கிளையினரின் மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத் தில் நடைபெறும்.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் சாரணர்கள், குருளைச் சாரணர்கள், சாரணத் தலைவர்கள் ஆகியோர் போட்டிகளில் பங்குபற்றவுள்ளதாக சாரணர் மாவட்ட ஆணையாளர் செ. சுப்பிரமணியம் தெரிவித்தார். (202-207)

## பரிசளிப்பு விழா இன்று

வலி வடக்கு, ஜூன் 5

மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற பெரு விளையாட்டுக்கள் மற்றும் தடகளப் போட்டிகள் ஆகியவற்றில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய வீரர்கள், வீராங்கனைகளுக்கான பரிசளிப்பு விழா நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில் வலிகாமம் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் க.சிவாஜி, அவரது பாரியாரான யாழ்.பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் திருமதி. சி. கருணாதேவி ஆகியோர் கலந்து கொள்வார்கள். (50-86)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 24 | 06.06.2008 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | திருதியை |
| | முன்னிரவு 07.03 வரை |
| நட்சத்திரம் : | புனர்பூசம் |
| | பி.இ. 03.57 வரை |
| சுபநேரம் : | 05.52 - 07.22 |
| ராகுகாலம் : | 10.22 - 11.52 |

## அமைதி கிட்டுவதற்கு வழி என்ன?

*மனிதன் சாதனைகள் பல பயின்றும், அமைதியற்று இருக்கிறான். ஏன்? உலகியல் மூலமாக, சமூகத்தின் மூலமாக, அரசியல் மூலமாக, அவனுக்குப் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. இவற்றின் காரணமாக அவனால் ஒருமைத் தன்மையை உணர இயலவில்லை. முதலில் இந்த இடையூறுகளை அவன் விலக்கவேண்டும். அவற்றைக் கவனியாதே. உனது இலட்சியத்தில் கவனம் செலுத்து.*

*அனைத்தும் கவலை. பிறப்பு ஒரு கவலை. குடும்ப வாழ்க்கை ஒரு கவலை. பிள்ளைப் பராயம் ஒரு கவலை. முதுமை ஒரு கவலை. அன்றாட வாழக்கை ஒரு கவலை. தோல்வியால் கவலை. இடைஞ்சல்களால் கவலை. எப்போதும் கவலை. கவலையில்லாத மனிதன் யாருமே இல்லை. ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு கவலை இருக்கும். ஒருவருக்கு அதிக கவலை, அடுத்தவருக்கு கவலை குறைவு. இது பரிமாணத்தின் வேறுபாடு மட்டுமே. இருவருக்கும் கவலையின் தன்மை ஒன்றே.*



*மனம் இடைஞ்சல்களைப் பற்றி கவலைப்படாத ஒரு நிலையை நாம் அடையவேண்டும். முழுமையான நிலையை அடைய, இது சரியா, தவறா என்று விசாரித்தறிய வேண்டும். தவறான வழியில் செல்லக்கூடாது. பவித்ரமான, தெய்வீக வழியைப் பின்பற்றவேண்டும். யாருக்கும் எந்தக் கெடுதலும் விளைவிக்கலாகாது. யாருக்கும் கெடுதல் வரும் சூழ்நிலையை ஏற்படுத்தலாகாது. சத்ய வழியைப் பின்பற்றும் போது நீ பயப்படத் தேவையில்லை.*

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரவிழிகளுடன் அஞ்சலி செலுத்தி நிற்கின்றோம்



## அமரர் பரமநாதன் சச்சிதானந்தன்

(முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கியின் மானிப்பாய்க் கிளை)

### போற்றும் சொற்களுக்கு சான்றாக வாழ்ந்தவர்

அன்பு, பணிவு, காருண்யம், கடமை, நேர்மை, கட்டுப்பாடு, நட்பு என்றெல்லாம் போற்றப்படும் சொற்களுக்கு சான்று கூறும் வகையில் வாழ்ந்த ஆத்மா மாண்புமிகு பரமநாதன் சச்சிதானந்தன். இத்தகைய சொற்பதங்களுக்கு குந்தகம் ஏற்பட்டு விட்டது. தேசிய சேமிப்பு வங்கிச் சமூகம் மாமனிதனை இழந்துவிட்டது. எமக்கே இத்தகைய பிரிவு எனின் அன்னாரது குடும்பத்தின் நிலை......

தனது ஒவ்வோர் அசைவிற்றும் காரணத்தை வேண்டி நிற்பவர் அவர். எதைச் செய்தாலும் எவ்வாறு செய்யலாம் என துல்லியமாகவும் சரியாகவும் செய்ய வேண்டும் என்பதே அவரது தீர்க்கம். இன்று எந்தக் காரணத்தையும் எமக்குக் கூறாமல் எங்கு சென்றீர்...? விண்ணுலகிற்கு நற்பண்பு புகட்டச் சென்றீர் எனின் நிலையற்ற மண்ணுலகில் வாழும் நாங்களும் பாவம் செய்தவர்களே.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முகாமையாளரும்
சக ஊழியர்களும்,
தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்.

### எல்லாவற்றையும் மதிக்கும் பண்பாளர்

வங்கியில் ஆரம்பகால உறுப்பினராக சேர்ந்து படிப்படியாக முன்னேறி மானிப்பாய் கிளையின் முகாமையாளராகப் பதவி வகித்து அமரத்துவம் அடைந்த நண்பன் சச்சிதானந்தன் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர், கற்றோரையும் மற்றோரையும் மதிக்கும் பண்பாளன், நேர்மையான ஒரு நண்பனை இழந்த சோகம் என்னையும், முகாமையாளர் திரு.பரமானந்தம் மற்றும் என் சக உத்தியோகத்தர்களையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் மன்றாடும் அதேவேளையில் அவரை இழந்து தவிக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் மனச் சாந்தி வேண்டி மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.

பதில் முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை.

### பழகுவதற்கு இனிமையானவர்

வங்கியில் தொடக்ககால உறுப்பினராக சேர்ந்து மானிப்பாய் கிளையின் முகாமையாளராகப் பதவி வகித்தபோது அமரத்துவம் அடைந்த நண்பன் சச்சிதானந்தன் அவர்கள் பழகுவதற்கு மிகவும்இனிமையானவர். நேர்மையான ஒரு நண்பனை இழந்த சோகம் முகாமையாளரான என்னையும் சக அலுவலர்களையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் மன்றாடும் அதேவேளையில் அவரை இழந்து தவிக்கும் அவரின் குடும்பத்தினரின் துயரிலும் பங்கு கொள்கிறோம்.

முகாமையாளர்
தேசிய சேமிப்பு வங்கி ,
கிளிநொச்சி.

### 36 ஆண்டு காலம் சிறப்புச் சேவை

1972ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி எம்முடன் தேசிய சேமிப்பு வங்கியில் இணைந்து 36 ஆண்டுகளாக வங்கிக்குச் சிறந்த சேவையாற்றிய திரு.பரமநாதன் சச்சிதானந்தன் இன்று எங்களிடையே இல்லை என்பதை நினைக்கும்போது ஆறாத துயரடைகின்றோம்.

அவரின் நேர்மையும் சிறந்த சேவையும் மானிப்பாய் வங்கியின் முகாமையாளர் பதவிக்கு அவரை உயர்த்தியது. அவரின் உயரிய பண்புகளால், வங்கி வாழ்க்கையில் மட்டுமல்ல குடும்ப வாழ்க்கையிலும் மகன் பொறியியலாளராகவும் மகன் டாக்டராகவும் கல்வியில் சிறந்து விளங்கி சிறப்படைந்துள்ளனர். இறைபதம் எய்திய திரு.ப.சச்சிதானந்தன் அவர்களின்ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள் மற்றும் சக வங்கி பணியாள் தொகுதியினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இ.ஈஸ்வரலிங்கம் - உதவிப் பொது முகாமையாளர் (செயற்பாடுகள்)
சி. சிவராசா - வலய முகாமையாளர் (வடக்கு கிழக்கு)
தேசிய சேமிப்பு வங்கியின் தலைமையகம், கொழும்பு -03

### தந்தைபோல் அரவணைத்தவர்

எமது வங்கியினை நிர்வகித்து சகல ஊழியர்களினதும் நலனில் அக்கறைகாட்டி தந்தை போல் அரவணைத்து வாடிக்கையாளரை நாடிச்சென்று தனக்கேயுரிய வேகத்தில் திருப்பியனுப்பி உயரிய சேவையாற்றிய இலகு உள்ளம் படைத்த எமது முகாமையாளரை இழந்து தவிக்கின்றோம்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

உதவி முகாமையாளரும்,
சக ஊழியர்களும்,
தே.சே.வங்கி, மானிப்பாய்.

### மறைவு பேரிழப்பாகும்

அன்பு, அடக்கம், பணிவுடன் வாடிக்கையாளர், உத்தியோகத்தர் அனைவருடன் பண்பாகப் பழகி தேசிய சேமிப்பு வங்கி பணியில் உயர்ந்து, சிறந்த முகாமையாளராகி நற்சேவையாற்றிக் கொண்டு இருந்த திரு.ப.சச்சிதானந்தன் அவர்களது மறைவு எமக்கெல் லாம் பேரிழப்பாகும். அன்னாரின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் செலுத்துகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகாமையாளர், உத்தியோகத்தர்கள்
தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்.

### மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றியவர்

தேசியசேமிப்பு வங்கியுடன்இணைந்து 36 ஆண்டுகள் சிறந்த சேவையாற்றிய பரமநாதன் சச்சிதானந்தன் அவர்களின் இழப்பு எமக்கு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும்.

அவர் தனது கடும் உழைப்பின் மூலம் எமது வங்கிக் கிளை ஊடாக மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றி யுள்ளார்.

எந்த விடயமானாலும் மனங் கோணாது உரியவேளைகளில் உரிய கடமைகளைச் செவ்வனே செய்து முடிக்கும் இவரது இழப்பு எம் எல்லோரையும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளது.

இவரது பிரிவால் துயரடைவதுடன் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், சக ஊழியர்களும்
தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி.

### நண்பனை இழந்து துயரடைகின்றோம்

தேசிய சேமிப்பு வங்கியின் மானிப்பாய் கிளையில் கடந்த 36 வருடங்களாகச் சேவையாற்றிய எமது நண்பன் பரமநாதன் சச்சிதானந்தன் அவர்களின் இழப்பால் பெரும் துயரடைகின்றோம்.

அவரது சேவையை நாம் இழந்து பெரும் துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகாமையாளர்களும்,
சக ஊழியர்களும்,
திருநெல்வேலி.

### உமது பாதையில் இனி எம் பயணங்கள்......

"அம்மா கூப்பிடுகிறாள்.. அம்மா கூப்பிடுகிறாள்..!" என்று
நாங்கள் பார்த்திருக்க, பரிதவித்திருக்க..சொல்லிச் சொல்லி
மின்னாமல் முழங்காமல் விடை கொண்டீரே..?

படாரென்ற கோபம்..சடாரென்ற சந்தோஷம்...
எதிலும் உமக்கு வேகம்...சாவிலும் கூடவா..?

எது செய்தாலும் கேட்டு, ஆராய்ந்து..செய்வீர்...
சிறியவர், பெரியவர் எதுவும் பாராது கேட்டறிந்து
செய்வீர்...சரியோ...தவறோ...பத்துமுறை ஆராய்ந்து
செய்வீரே..பிரியும்போது மட்டும் ஏன் எம்மை
கேளாது சென்றீர்..?
எவரின் நன்மையோ..தீமையோ...முதலாளாய் நிற்பீரே...
அன்புமொழிபேசி அரவணைக்க இனியார் வருவார்..
அவனியிலே உம்பிரிவால் ஆறுதலை நாமிழந்தோம்..

ஒற்றையடிப் பாதையெனும் வாழ்வினிலே...
காற்றெனவே வந்த காலன்..கடிதெனவே உம்மை
பிரிக்க...கனத்த நெஞ்சமும்...ஈரவிழிகளுமாய் நாங்கள்...
இன்னல்கள் நிறைந்த இந்த இருண்ட நாள்களில்
எத்தனை செயற்கரிய செயல்களை நீர் புரிந்தீர்...
வங்கியை தரமுயரச்செய்து, வாடிக்கையாளரைப் பெருக்கி,
கிளைக்காரியாலயம் மாற்றி, விழா,எடுத்து, எத்தனை...எத்தனை....

சுட்டெரிக்கும் சூரியனோ..கொட்டும் மழையோ...
படரும் பனியோ...ஊரை அடக்கும் ஊரடங்குச் சட்டமோ...
வருத்தும் நோயோ... எதுவும் உமக்குப்
பொருட்டல்லவே...எதுவும் உம்மை தடுத்தல்லவே
எப்பொழுதும் உம் நினைவு வங்கி வங்கி வங்கி.....மட்டுமே...

எமது நெஞ்சமெல்லாம் உம் நீங்காத நினைவுகளுடன்...உமது
பாதையில் எம் பயணங்கள் தொடரும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# உலக சுற்றாடல் தினம்

# 2008.06.05

## பிரகடனம்

## "பொது இடங்களில் துப்புதலைத் தவிர்ப்போம்"






பொது இடங்களில் துப்புவது தவறாகும்.

ஏனெனில்,

- ❖ சூழலின் சுகாதாரத்தைக் கெடுக்கும்
- ❖ நோய்க்கிருமிகள் பரவக் காரணமாகும்.
- ❖ அருவருப்பான செயலாகும்.
- ❖ பொதுமக்களையும் அவர்களின் உடைமைகளையும் அசுத்தப்படுத்தலாம.

### பொது இடங்களில் துப்பாதிருக்க என்ன செய்யலாம்?

- ➢ தேவையின்றித் துப்புவதைத் தவிர்த்தல் வேண்டும்.
- ➢ பொது இடங்களில் வெற்றிலை புகையிலை போடுவதைத் தவிர்த்தல் வேண்டும்.
- ➢ துப்புவதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் துப்பவும் (வாளிகள், கொள்கலன்கள்)




" காச நோயாளியின் ஒருசிறு துளி துப்பலில் ஒரு கோடி அளவு வரையான காசநோய்க் கிருமிகள் பரவும்"

2008.06.05

நல்லூர் பிரதேச சபை.

இலங்கை வங்கி
தேசத்தின்
வங்கியாளர்

மக்கள் மனதறிந்த
வங்கி
மக்கள் வங்கி

*NSB* பென்சன்+
(எதிர்கால
நல்வாழ்விற்காக)
*NSB*, திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MINISTRY OF CONSTRUCTION AND ENGINEERING SERVICES
## DEPARTMENT OF BUILDINGS

### INVITATION FOR BIDS

*Partition, Addition and Improvements to Arts Block Stage V - University of Jaffna*

**The Chairman, Department Procurement Committee,** on behalf of the **Department of Buildings** now invites sealed bids from eligible and qualified bidders for "Partition, Addition and Improvement to Art Block. Stage V- University of Jaffna" as described below and estimated to cost of **Rs.5.75Mn.**

The construction period is **84 Days.**

2, Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade **M6/C1** or above with the Institute Construction Training and Development (ICTAD).

4.Interested bidders may obtain further information for **the Chief Engineer's Office (Jaffna), Department of Buildings, Beach Road, Jaffna,** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**

Contact numbers are: Phone: 021-2222781, Facsimile: 021-2222781

5.A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to **the Chief Engineer's Office (Jaffna), Department of Buildings, Beach Road, Jaffna,** from **03rd June 2008** until **24th June 2008** from **9:00hrs to 15:00 hrs** upon payment of a non refundable fee of **Rupees one thousand (Rs.1,000/-).**

6.Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Department Procurement Committee, Department of Buildings, 2nd Floor, "Sethsiripaya", Battaramulla at or before 10.00 hrs on 01st July 2008.** Bids will be opened soon after closing at the Contract Branch, Department of Buildings, 2nd Floor, "Sethsiripaya", Battaramulla in presence of the bidders' representatives who choose to attend.

Bidders are advised to enter "Sethsiripaya" Premises at least 1 hour before the scheduled time for tender closing, due to security checking.

All bids shall be accompanied by a Bid Security for an amount of **Rupees One hundred and fifteen thousand (Rs.1 15,000.00)** which should be valid up to **13th October 2008.**

D.C.A.S. **Pathmathilaka** Director General of Buildings
Department of Buildings "Sethsiripaya", Battararnulla.
www.buildings.gov.lk (c/553105)

## மரண அறிவித்தல்கள்



### வைரமுத்து வடிவேலு
*(ஓய்வுபெற்ற P.W.D. ஓவசியர்)*

துன்னாலை மத்தியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு - 06 வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற P.W.D ஓவசியர் வைரமுத்து வடிவேலு கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி வைரமுத்து - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துக்குமார் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும் சரவணசிவா (RANJANAS JEWELLERS), ஆனந்தசிவா (WESTERN JEWELLERS), சச்சிதானந்தசிவா (துன்னாலை), அருளானந்தசிவா (WESTERN JEWELLERS), இராஜேஸ்வரி, அருளேஸ்வரி (U.K), மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரேணுகாதேவி, விக்கினேஸ்வரி, மகாராணி, மனோகரி, யோகேஸ்வரன் (Retd. ASSESSOR, INLAND REVENUE), சிவசுந்தரம் (WESTERN JEWELLERS & SILK EMPORIUM - U.K.) , Dr.மங்களேஸ்வரன் (CONSULTANT PHYSICIAN, KANDY) ஆகியோரின் அன்பு மாமனாரும் Dr. சபேசன், இளவரசி (H.N.B), ஜமுனதீரன் (BUILDING CONSULTANT), கலையரசி, பாபு, தமிழரசி (CANADA), துஷியந்தன் (ELECTRONIC ENGINEER - U.K), தாரணி, அருள்பிரசாத் (SINGAPORE) , அருள்பிரசாந் (SINGAPORE), சிறிகரன் (U.K), காயத்திரி, செந்தூரன் (ENGINEER), கார்த்திகா, கோகுலதாஸ் (ENGINEER - U.K), கவிதா, கோபிதாஸ் (UNIVERSITY OF COLOMBO) , Dr. கோபிராஜ் (ENGINEER - U.K), க.குகராஜ் (ENGINEER), மஹாராஜ் (U.K), ஷாலினி (UNIVERSITY OF COLOMBO), Dr.ஜனகன் (IDM), அச்சுதன் (UNIVERSITY OF J'PURA), ஷாமினி (HINDU LADIES COLLEGE) ஆகியோரின் பாசமிகு பேரனும் துவாரகன்,சங்கவி, அச்சயன், சண்முகப்பிரியா, ஜஸ்வர்யா, சேயந்தினி, மதுஷனி, ஹரிஸ்ராஜ், ஷருஜன், தரண்யா, பிரவீன் ஆகியோரின் பாசமிகு பூட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2008) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் இல.15, அலெக்சாண்ட்ரா வீதி, வெள்ளவத்தை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொறளை கனத்தை இந்து மயானத்தில் மு.ப 10.30 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

தொலைபேசி: 2501190 (சி/553107)

### கூட்டம்

யாழ்.சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமான மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதாரசேவைகள்பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### சுழிபுரத்தில் திருட்டு

சுழிபுரம்,ஜூன்5

சுழிபுரம் மத்தியில் வீடொன்றில் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் அண்மையில் திருடப்பட்டுள்ளது.

வீட்டில் ஆள்கள் இருந்த வேளையிலேயே சத்தம், சந்தடியில்லாமல் இத் திருட்டு இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

(202-28)

### மோட்டார் சைக்கிளின் பாகங்கள் திருட்டு

திருடிச் சென்ற மோட்டார் சைக்கிளின் இயந்திரம் இயங்காததால் அதன் பெறுமதியான உதிரிப்பாகங்களை எடுத்துக் கொண்டு சென்றனர் திருடர்கள்.

இச் சம்பவம் அண்மையில் சாவகச்சேரியில் இடம் பெற்றது.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற செயலமர்வில் கலந்து கொண்ட அதிபரின் மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்றவர்கள் அதன் உதிரிப்பாகங்களை எடுத்துக் கொண்டு அதிபரின் பாடசாலையில் மிகுதியை கைவிட்டுச் சென்றுள்ளதாகக் தெரிவிக்கப்பட்டது.

(202-207)

### கலைஞர்களின் விபரங்கள் கோரப்படுகின்றன

நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவையினால் மறைந்த மற்றும் வாழும் கலைஞர்கள் பற்றிய விவரங்கள் ஆவணப்படுத்தலுக்காக கோரப்படுகின்றன.

நல்லூர் பிரதேச பிரிவுக்குட்பட்ட கலைஞர்களின் விண்ணப்பப் படிவத்தினையும் மேலதிக விவரங்களையும் எமது செயலக கலாசார பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 30 ஆம் திகதி ஆகும்.

(202)

## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திசைமுகப்படுத்தும் வகுப்புகள்- 2008
## கலை முதற்தேர்வு
## கல்வியாண்டு 2006/2007 மற்றும் 2007/ 2008

மேற்படி கல்வியாண்டுகளில் கலைமுதற் தேர்வுக்காக புதிதாக பதிவு செய்த மாணவர்களின் நன்மை கருதி வெளிவாரி பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகினால், 07.06.2008 (சனிக்கிழமை) தொடக்கம், 13.07.2008 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீடத்தில், பின்வரும் நேர அட்டவணையின் பிரகாரம் திசைமுகப்படுத்தும் வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. மேற்படி கல்வியாண்டுகளில் கலைமுதற் தேர்வுக்காக பதிவு செய்த மாணவர்கள் அனைவரும் இத்திசைமுகப்படுத்தும் வகுப்புகளில் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**நேர அட்டவணை**

| திகதி | பாடம் | காலை | மாலை |
|---|---|---|---|
| 07.06.2008 சனிக்கிழமை | அரசியல் விஞ்ஞானம் | 09.00 - 12.00 | 01.00 - 03.00 |
| 08.06.2008 ஞாயிற்றுக்கிழமை | அரசியல் விஞ்ஞானம் | 09.00 - 12.00 | |
| 09.06.2008 திங்கட்கிழமை | பொருளியல் | 09.00 - 11.00 | 12.00 - 02.00 |
| 10.06.2008 செவ்வாய்க்கிழமை | பொருளியல் | 09.00 - 11.00 | 12.00 - 02.00 |
| 11.06.2008 புதன்கிழமை | இரண்டாம் மொழியாக ஆங்கிலம் | 09.00 - 12.00 | 01.00 - 03.00 |
| 13.06.2008 வெள்ளிக்கிழமை | வரலாறு | 09.00 - 12.00 | 01.00 - 03.00 |
| 14.06.2008 சனிக்கிழமை | வரலாறு | 09.00 - 12.00 | |
| 14.06.2008 சனிக்கிழமை | அளவையியலும் விஞ்ஞான முறைகளும் குடித்தொகைக் கல்வி | | 01.00 - 03.00<br>01.00 - 03.00 |
| 15.06.2008 ஞாயிற்றுக்கிழமை | சுற்றுப்புறச் சூழற் கல்வி | 09.00 - 11.00 | 12.00 - 02.00 |
| 16.06.2008 திங்கட்கிழமை | கிறிஸ்தவ நாகரிகம் | 09.00 - 12.00 | 01.00 - 03.00 |
| 17.06.2008 செவ்வாய்க்கிழமை | கிறிஸ்தவ நாகரிகம் | 09.00 - 12.00 | |
| 17.06.2008 செவ்வாய்க்கிழமை | அளவையியலும் விஞ்ஞான முறைகளும் | | 01.00 - 03.00 |
| 18.06.2008 புதன்கிழமை | புவியியல் | 09.00 - 11.00 | 12.00 - 02.00 |
| 19.06.2008 வியாழக்கிழமை | புவியியல் | 09.00 - 11.00 | 12.00 - 02.00 |
| 20.06.2008 வெள்ளிக்கிழமை | அடிப்படைக் கணிதம் | 09.00 - 11.00 | 12.00- 2.00 |
| 21.06.2008 சனிக்கிழமை | இந்து நாகரிகம் | 09.00 - 12.00 | 01.00 - 03.00 |
| 22.06.2008 ஞாயிற்றுக்கிழமை | இந்து நாகரிகம் | 09.00 - 12.00 | |
| 23.06.2008 திங்கட்கிழமை | நாடகமும் அரங்கியலும் | 09.00 - 01.00 | |
| 24.06.2008 செவ்வாய்க்கிழமை | நாடகமும் அரங்கியலும் | 09.00 - 01.00 | |
| 25.06.2008 புதன்கிழமை | ஆங்கில இலக்கியம் | 09.00 - 01.00 | |
| 26.06.2008 வியாழக்கிழமை | ஆங்கில இலக்கியம் | 09.00 - 01.00 | |
| 27.06.2008 வெள்ளிக்கிழமை | மெய்யியல் | 09.00 - 01.00 | |
| 28.06.2008 சனிக்கிழமை | சமூக உளவியல் | 09.00 - 01.00 | |
| 29.06.2008 ஞாயிற்றுக்கிழமை | மெய்யியல் | 09.00 - 01.00 | |
| 30.06.2008 திங்கட்கிழமை | தமிழ் | 09.00 - 01.00 | |
| 01.07.2008 செவ்வாய்க்கிழமை | வணிகக்கல்வி | 09.00 - 12.00 | 01.00 - 03.00 |
| 02.07.2008 புதன்கிழமை | வணிகக்கல்வி | 09.00 - 12.00 | 01.00 - 02.00 |
| 02.07.2008 புதன்கிழமை | முகாமைத்துவத்திற்கோர் அறிமுகம் | 09.00 - 01.00 | |
| 04.07.2008 வெள்ளிக்கிழமை | தமிழ் | 09.00 - 01.00 | |
| 05.07.2008 சனிக்கிழமை | சங்கீதம்/நடனம் | 09.00 - 12.00 | 01.00 - 03.00 |
| 06.07.2008 ஞாயிற்றுக்கிழமை | சங்கீதம் /நடனம் | 09.00 - 12.00 | |
| 12.07.2008 சனிக்கிழமை | மொழியியல் | 09.00 - 12.00 | 01.00 - 03.00 |
| 13.07.2008 ஞாயிற்றுக்கிழமை | மொழியியல் | 09.00 - 12.00 | |

மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் 021 - 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்**
03.06.2008 (சி/553117)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# உதயனின் விசேட ஆசிரியர் குழாமின் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் இலகுவழிப் பயிற்சி -10

**பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அது தொடர்பாகக் கேட்கப்பட்டுள்ள 01 தொடக்கம் 06 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

எல்லா உயிர்களையும் காப்பவரும் அந்தக் கடவுளே. ஆனால் இவ்வளவு வல்லமை மிக்க கடவுளைக் கண்ணால் காண முடியாது.ஆனால் கடவுளைப் போன்று குழந்தைகளைப் பெற்று உருவாக்கி வளர்த்து வாழ வைப்பவர் யார்? உங்கள் தாயும் தந்தையும் தானே? இவர்களை உங்களால் பார்க்க முடியும். கடவுளைப் போன்று உயிருக்கு உருவம் கொடுத்து உருவாக்கி புதிய ஜீவனைத் தோற்றுவிக்கும் பெற்றோர் கண்களால் காணக்கூடிய தெய்வம். ஒரு குழந்தை முதன் முதலில் பார்த்து புரிந்து கொள்ளக்கூடிய தெய்வமாக விளங்குபவர் தாயும் தந்தையுமே. இதனாலே அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் எனக் கூறப்பட்டுள்ளது.

01. ''ஜீவன்'' என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
02. ''வல்லமை'' என்பதன் ஒத்த கருத்துச் சொல் ஒன்று தருக?
03. ''கண்களால் காணக்கூடிய தெய்வம்'' யார் எனக் கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்?
04. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் எனக் கூறியவர் யார்?
05. ''குழுந்தை'' என்பது எப்பாலிற்குரியது?
06. பின்வரும் வாக்கியத்தை நிகழ்காலமாக மாற்றி அமைக்க?
''இவர்களை உங்களால் பார்க்க முடியும்''
07. ''கை தூக்கி விடுதல்'' என்பதன் கருத்து யாது?
08. பல கலைகளும் பயிலும் உயர்தர மாணவர்களுக்குரிய இடம் எவ்வாறு அழைக்கப்படும்?
09. பின்வரும் கருத்திற்கு மிகப் பொருத்தமான பழமொழியைத் தருக?
1. எந்தக் கருமத்தைச் செய்யும்போதும் அளவுடன் செய்ய வேண்டும்.
2. முக்கியமானவர்கள் இன்றி எக்கருமமும் நடைபெறாது.
10. பின்வரும் ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச்சொல்லை (ஆங்கிலத்தில்) எழுதுக.
1. வானொலி -
2. ஆசிரியர் -
3.வைத்தியசாலை -
11. பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச்சொல்லுக்குமான கருத்தைத் தமிழில் எழுதுக?
1. Thank You very much 2.Sory I dont have time
3. Wish You good luck
12. பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் கருத்தைத் தமிழில் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக?
1. ஒப கொஹெத கியே? ..............................
2. ஒபகே ரக்ஷாவ மொகத்த? ..............................
13. அடைப்பினுள் உள்ள சொற்களிலிருந்து திருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.
கைவில்லை/கவர்ச்சுத்தியல்/மீன்/அன்னம்/பாரமானி/மழைமானி/தியலும்/பம்பரகந்த.
1. இரும்பாணியைக் கழற்றுவதற்குப் பயன்படும் உபகரணம்
..............................
2. பூக்களினால் சுவாசிக்கும் அங்கி
..............................
3. சிறு பொருள்களைப் பெருப்பித்துப் பார்க்க உதவும் உபகரணம்
..............................
4. மழை வீழ்ச்சியை அளவிடும் கருவி.
..............................
5. இலங்கையிலுள்ள மிக உயர்ந்த நீர்வீழ்ச்சி.
..............................
14. பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியீடுகளை இடுக?
1. அன்பானவர்களே நாம் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள்

***15தொடக்கம் 32 வரையிலான வினாக்களுக்கு உரிய சரியான விடையின் கீழ்கோடிடுக***

15.தேசப்படங்களில் வனங்களைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நியம நிறம் எது?
1. நீலம் 2. சிவப்பு 3. பச்சை 4. கறுப்பு
16. பதிவுத் தபால் ஒன்று அஞ்சல் செய்வதற்கு கடித உறையில் ஒட்ட வேண்டிய முத்திரையின் பெறுமதி
1. 16 ரூபா 2. 20 ரூபா 3. 16.50 ரூபா 4. 12 ரூபா
17. பின்வருவனவற்றுள் மணமுள்ள அழகான பூக்கள் மலரும் முட்களுள்ள செடி
1. தூதுவளை 2. மல்லிகை 3. றோசா 4. செவ்வந்தி
18. பின்வருவனவற்றுள் எது விலங்குணவாகும்?
1. நல்லெண்ணெய் 2. பழரசம் 3. பால் 4. கீரை
19. பக்ஸ் என்பதன் சரியான தமிழ்ச் சொல்
1. தொலை நகல் 2. மின்னஞ்சல் 3. இலத்திரனியல் 4. இணையம்
20. இலங்கையின் தேசிய கீதத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்.
1. ஆனந்த சமரக்கோன் 2. ஆறுமுகநாவலர்
3. மு. நல்லதம்பி 4. விபுலானந்தர்
21. கண்ணாடித் தொழிற்சாலை அமைந்துள்ள இடமாக அமையக்கூடியது.
1. நாத்தாண்டியா 2. புல்மோட்டை
3. ஜின்தோட்டை 4.பொலநறுவை
22.வெப்பமானியில் காணப்படும் திரவ உலோகமாக அமைவது.
1. வெள்ளி 2. இரசம் 3. நிக்கல் 4.பொன்
23. பின்வருவனவற்றில் அரச வங்கியாக அமையாதது.
1. மக்கள் வங்கி 2. கிராமிய வங்கி
3. இலங்கை வங்கி 4. சம்பத் வங்கி
24. உணவின் போசனைப் பெறுமானத்தை அளக்கும் அலகாக அமைவது.
1. கிலோக்கிராம் 2. கிராம்
3. கலோரி 4. யூல்


25. இ.போ.ச. என்பதன் விரிவாக்கமாக அமைவது.
1. இலங்கை போசனைச் சங்கம்
2. இலங்கை போக்குவரத்துச் சபை
3. இலங்கை போர் நிறுத்தச் சபை
4. இலங்கை போரிற்கும் சமாதானத்திற்குமான சபை
26. வேறுபட்ட படத்தின் கீழ் கீறிடுக?




27.வேறுபட்ட படத்தின் கீழ் கீறிடுக?




28. உருவில் காணப்படும் தையல் எவ்வகைத் தையல் முறைக்குரியது?



1.சங்கிலித்தையல் 2. கம்பளித்தையல்
3.சோம்தையல் 4. வெட்டுக்குத்துத் தையல்


29.  இந்த உபகரணம் எத்தனையாம் நெம்பு வகையைச் சார்ந்தது.
1. 1ம் வகை நெம்பு 2. 2ம் வகை நெம்பு
3. 3ம் வகை நெம்பு 4. எளிய பொறி

30. இந்த அலங்காரத்தை எவ்வாறு அழைப்பர்.



1.குந்தரிகம் 2. கல்பிந்து
3. இரட்டைச் சுழி 4. தனிச்சுழி

31.  உருவில் குறித்து நிற்கும் வீதிச் சமிஞ்ஞையின் கருத்து யாது?
1. புகையிரதக் கடவை 2. முன்னால் புகையிரதக் கடவை
3. வாகனம் நிறுத்துதல் தடை 4. அபாயம் நிறைந்தது

32.  இந்த ஆமையைச் செய்வதற்குப் பொருத்தமானதும், எளிதானதுமான பொருள்.
1. கடதாசி 2. களிமண்
3. துணி 4. மரம்

கீழ்காணும் படத்திற்கு பொருத்தமான பெயர்களை புள்ளிக்கோட்டில் எழுதுக.



.................. 33. .................. 34. .................. 35. .................. 36.

ஒவ்வொரு உருவிலும் காட்டப்பட்டுள்ள விளையாட்டுக்கு பொருத்தமான பெயர்களை புள்ளிக்கோட்டில் எழுதுக?



.................. 37. .................. 38. .................. 39. .................. 40.

41. 1. இலங்கையின் தற்போதைய பிரதமரின் பெயரைத் தருக?..............................
2. இலங்கையின் தற்போதைய ஜனாதிபதியின் பெயரைத் தருக?..............................

42.  இங்கு காட்டப்பட்ட உடுக்கோலத்திற்கு வழங்கும் பெயர் யாது?
1. விருச்சிகம் 2. பெருங்கரடி
3. பெருநாய் 4. சிறுகரடி


43.  அருகில் காட்டப்படும் விளையாட்டின் இலங்கை அணியின் தலைவர் யார்?
1. சனத் ஜெயசூரிய 2. மாவன்அத்தபத்து
3. மஹேல ஜெயவர்த்தனா 4. முத்தையா முரளிதரன்

44. வவுனியா விபுலாநந்தாக் கல்லூரியில் இருந்து போட்டிப் பரீட்சை ஒன்றில் பங்கு பற்றிய நான்கு மாணவர்கள் மூன்று பாடங்களில் பெற்ற புள்ளிகள் பின்வருமாறு அட்டவணையில் காணப்படுகிறது.

| *மாணவர்கள்* | *பாடங்கள்* | | |
|---|---|---|---|
| | தமிழ் | பொதுஅறிவு | விஞ்ஞானம் |
| கண்ணன் | 78 | 42 | 63 |
| கபிலன் | 38 | 66 | 52 |
| கஜன் | 92 | 55 | - |
| கமல் | 86 | 72 | 83 |

1. கமல் மூன்று பாடங்களிலும் பெற்ற மொத்தப்புள்ளி யாது?
2. கஜன் பெற்ற மொத்தப்புள்ளி 228 எனின் அவன் விஞ்ஞானத்தில் பெற்ற புள்ளி யாது?
3. நால்வருடைய பொதுஅறிவுப் புள்ளிகளின் மொத்த எண்ணிக்கை யாது?
4. நால்வரிலும் மூன்று பாடங்களிலும் குறைவான புள்ளியைப் பெற்றவர் யார்?
5. கமலுடைய மொத்தப் புள்ளிகளுக்கும் கபிலனுடைய மொத்தப்புள்ளிகளுக்கும் இடையேயான வித்தியாசத்தைத் தருக?

45. உருவை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடைதருக?
வார நாள்களில் அரச அலுவலகம் ஒன்றில் பயன்பெற்ற பயனாளிகளை உரு காட்டுகிறது.




1. செவ்வாய்க்கிழமை பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை யாது?
2. அதி கூடிய பயனாளிகள் எந்நாளில் பயனடைந்துள்ளனர்?
3. வரைவில் கூடிய பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கைக்கும் குறைவாகப் பயன்பெற்ற பயனாளிகளுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில், கொக்குவில் பகுதிகளில் மூன்று வீடுகளில் கொள்ளையர் அட்டகாசம்

## பெறுமதிமிக்க நகைகள், பொருள்கள் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜூன்5

கோண்டாவில் மற்றும் கொக்குவில் பகுதிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மூன்று வீடுகளில் புகுந்த கொள்ளையர்கள் பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கொக்குவில் கிழக்கு பொற்பதி பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக உள்ள அந்தணர் ஒருவரின் வீட்டிற்குள் ஆயுதங்களுடன் புகுந்த கொள்ளையர்கள் குருக்களை வெட்டிக் காயப்படுத்திவிட்டு அங்கிருந்து நகைகள் , பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

அத்துடன் அயல் வீடு ஒன்றினுள் புகுந்த கொள்ளையர்கள் குறிப்பிட்ட வீட்டுக் கதவைத் திறக்குமாறு கூறியுள்ளனர். அவர்கள் திறக்காது கூக்குரலிடவே கொள்ளையர் கள் தப்பிச்சென்றுள்ளனர்.

இதே வேளை- கோண்டாவில் நவரத்தினராசா வீதியில் உள்ள அந்தணர் ஒருவரின் வீட்டிற்குச் சென்ற இக் கும்பல், அவர்கள் கதவைத் திறக்க மறுத்த போது வீட்டு முற்றத்தில் நின்ற மோட்டார் சைக்கிளை தீயிட்டுக் கொழுத்திவிட்டுச் சென்றுள்ளனர். காயமடைந்த அந்தணர் சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(203-86-25)

# திக்கம் மானாண்டிச் சந்தையைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

மந்திகை, ஜூன் 5

முற்றாக அழிக்கப்பட்ட பருத்தித்துறைப் பிரதேச சபையின் திக்கம் மானாண்டிச் சந்தையை அபிவிருத்தி செய்யுமாறு திக்கம் மத்திய சனசமூக நிலையமும் திக்கம் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

அக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடமராட்சியில் 1987ஆம் ஆண்டு ஒப்பரேசன் லிபரேசன் இராணுவ நடவடிக்கையின்போது முற்றாக அழிக்கப்பட்ட திக்கம் மானாண்டிச் சந்தை இன்றுவரை அபிவிருத்தி செய்யப்படாமல் இருப்பது மிகக் கவலைக்குரியதாகும். தற்போது இச்சந்தையைப் பாவிக்கும் விற்பனையாளர்கள், நுகர்வோர் பலத்த இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இச் சந்தையில் குழாய்க்கிணறு நிர்மாணிக்கப்பட்டபோதும் நீர்த்தாங்கி ஒன்று நிர்மாணிக்கப்படாமையால் அச் செயற்பாடு செயலிழந்துள்ளது. இதனால் இங்கு நீர் பெறமுடியாத அவலநிலை உள்ளது. இங்கு தண்ணீர் தாங்கியொன்று நிர்மாணிக்கப்பட்டு நீர் விநியோகம் இடம்பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது முக்கியமாகும்.

பழைய சந்தையின் கட்டட இடிபாடுகள் அகற்றப்படாமல் இருப்பதனால் இச் சந்தைக்கு வருகை தரும் விற்பனையாளர்கள், நுகர்வோர் பல்வேறு சிரமங்களையும் அசௌகரியங்களையும் அனுபவித்து வருகின்றனர். எனவே இந்த இடிபாடுகள் அங்கிருந்து அகற்றி நல்ல சூழலை ஏற்படுத்தித் தரவேண்டும் - என்றுள்ளது.

(202-218)

# குடாநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்த அமைச்சர் நடவடிக்கை

யாழ்.குடாநாட்டில் செயற்படுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையே ஓர் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த 2 ஆம் திகதி யாழ். குடாநாட்டில் உள்ள சமூக சேவை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டு மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றபோதிலும் அந்நிறுவனங்களின் பணிகள் இன்னும் அதிகளவில் பரந்துபட்ட மக்களிடையே ஒருங்கிணைப்புடன் போய்ச்சேருவதற்கு இந்த நிறுவனங்களுக்கிடையில் ஓர் ஒருங்கிணைப்பின் தேவை அவசியமாகும் என்பதை அமைச்சர் டக்ளஸ்உணர்த்தினார். யாழ்.குடா நாட்டில் செயற்பட்டுவருகின்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் விவரங்களைத் தன்னிடம் சமர்ப்பிக்கும்படியும் இந் நிறுவனங்கள் தொடர்பில் சரியானதோர் ஆய்வினை மேற்கொண்டு அவற்றின் பணிகள் பொது மக்களிடையே மேன்மேலும் பயன்மிக்க வகையில் விரிவடையக்கூடிய நடவடிக்கைகளை கூடிய விரைவில் தான் மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குடாநாட்டில் தற்போதைய சூழ் நிலைக்கேற்ற தொழிற்பயிற்சிகளை வழங் குவதற்கான வேலைத்திட்டங்களை இனங்கண்டு இது தொடர்பில் உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் அவர் கேட்டுக்கொண்டார்.

# தென்மராட்சிப் பிரதேச வறுமைப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 5

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினர் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், ஜீ.சி.ஈ உயர் தரம் கற்கும் 20 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் நிதியினையும் வழங்கினர்.

நேற்று முன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் இவை வழங்கப்பட்டன.

புகைத்தல் எதிர்ப்புத் தினத்தையொட்டி கடந்த வருடம் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களால் கொடிவாரம் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியில் இவை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புகளில் கற்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்களும் கடந்த வருட ஜீ.சீ.ஈ. சாதாரணதர பரீட்சையில் சித்தி பெற்ற சமுர்த்திக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதியும் வழங்கப்பட்டன.

## சமய சந்நிதிகளில்...

இணுவில் கந்தசாமி கோயிலின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. அடுத்த மாதம் முதலாம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறும். (202)

* * * * *

யாழ்ப்பாணம், ஜூன் 5

வண். வடமேற்கு ஆனைக்கோட்டை ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயத்தில் தற்போது திருப்பணி வேலைகள் நடைபெற்றுவருகின்றன. இதையொட்டி சாந்தீக திருவிழாக்காலங்களில் - எதிர்வரும் 18 ஆம் திகதி வரை மாலை 4.30 மணியிலிருந்து விசேட அபிஷேகம், பூசைகள் என்பன இடம்பெறும். (202)

* * * * *

யாழ்ப்பாணம், ஜூன் 5

சாவகச்சேரி பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய பெருந் திருவிழா எதிர்வரும் ஒன்பதாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (202-207)

# வைத்தியர்கள் உட்பட 452 பணியாளர்களுக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் வெற்றிடம்

## முழுமையான சேவை வழங்க முடியாமைக்கு அதுவே காரணம்



யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்போது 452 பணியாளர்களுக்கான வெற் றிடங்கள் உள்ளன. அத்துடன் மாவட்டத்தில் உள்ள 86 வைத்திய நிலையங்களில் பணியாளர் பற்றாக் குறையால் முழுமையான சேவையை வழங்க முடியாதுள்ளது.

இவ்வாறு சுட்டிக் காட்டுகின்றார் யாழ். அரச அதிபர் கே .கணேஷ்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட 26 ஆம் அணியின் iii ஆவது குழு தயாரித்த 'நுளம்புகளுடன் ஒரு குருஷேத்திரம்' என்னும் இறுவட்டின் வெளியீட்டு விழா 'உதயன்' ஊடக அனுசரணையுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே மேற்கண்ட தகவலை யாழ். அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

யாழ். போதனாவைத்தியசாலையில் வைத்திய அதிகாரிகள் உட்பட ஆயிரத்து357 பணியாளர்கள் கடயைாற்றவேண்டும். தற்போது 905பேர்கள் மட்டுமேகடமையில் உள்ளார்கள். 452 வெற்றிடங்கள் உள்ளன.

மாவட்டத்தில் உள்ள 86 நிலையங்களில் முற்றுமுழுதான சேவை வழங்க முடியாத நிலை உள்ளது. மக்கள் இந்த நிலையங்களூடாக நல்ல சேவையை எதிர்பார்த்த போதும் துரதிஷ்டமாக பணியாளர்கள் பற்றாக்குறையால் அது முழுமையாகக் கிடைக்கவில்லை.

யாழ். மாவட்டத்தில் நுளம்புப் பெருக்கத்தால் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான அறிவுரைகளை வழங்கும் இந்த இறுவட்டு வெளியீடு எமது மக்களுக்குக் கிடைத்த உன்னதமான ஒன்று. குப்பை கூழங்களை அகற்றுவது,வடிகால்களைப்பாதுகாப்பது போன்ற செயற்பாடுகள் உள்ளூராட்சி மன்றங்கள்தான் செய்யவேண்டும் என எதிர்பார்க்காது பொதுமக்கள் இந்த நடவடிக்கைக்கு தமது பங்களிப்பை வழங்க வேண்டும். அவ்வாறு பங்களிப்பை வழங்காதவரை தொற்று நோய்களையும் நுளம்புப் பெருக்கத்தையும் கட்டுப்படுத் துவது முடியாத காரியமாகும்.

இங்கு படித்துப்பட்டம் பெற்ற பின் வைத்திய மாணவர்கள் வெளியிடங்களில் பணி புரிவதில் நாட்டம் கொண்டுள்ளனர். அதே சமயம் அனேக வைத்திய நிபுணர்கள் குடாநாட்டு மக்களின் தேவையை உணர்ந்து பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் இந்த மண்ணில் தங்கிச் சேவை புரிகின்றார்கள். அவர்களைப் பின்பற்றி தமது கல்வியை முடித்துக் கொண்டு வெளியேறும் வைத்திய மாணவர்களும் தமது சொந்த மக்களுக்குப் பணியாற்ற முன்வரவேண்டும்.

### வைத்தியர்களின் சேவை உள்ளம் கொண்ட பணி 2006 இல்

2006 ஆம் ஆண்டில் உணவுப் பிரச்சினைகள் அதிகரித்துக் காணப்பட்டுமக்கள் சங்கக் கடைகளின் முன்னால் வரிசையில் காத்திருந்த சமயம் சிக்கின்குனியாவும் எமது மக்களைப் பிடித்துக்கொண்டது. போதிய உணவுகளற்ற நிலையிலும் நோய்த் தாக்கத்தினாலும் பலர் பல்வேறு கஷ்டங்களைஅனுபவித்துக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் சேவை உள்ளம் கொண்ட எமது வைத்திய அதிகாரிகள், நிபுணர்களின் பணி சிக்குன் குனியாவைக் கட்டுப்படுத்துவதில் பெரும் பங்கு வகித்தது.

அண்மையில் இடம்பெற்ற மாவட்டக் குழுக்கூட்டத்தில் வடிகால்கள், குளங்களைச் சீர்செய்வது தொடர்பான திட்டங்களைச் செயற்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்த மாவட்ட மக்களின் சுற்றாடல் சூழல்களை பாதுகாப்பதில் நிறுவனங்களும் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும். எல்லோரும் ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலம் சுகாதாரமற்ற சூழலை ஒழித்துக் கட்ட முன்வரவேண்டும் - என்றார்.

(202-111)



குழந்தை சண்முகலிங்கம் எழுதிய மூன்று நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா கடந்த 28ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக புவியியல் மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் திருமறைக் கலாமன்ற [illegible] கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளரும் எழுத்தாளருமான பராக்கிரம கிரியெல்ல, நாடகமும் அரங்கியலும் துறை விரிவு[illegible] உரை நிகழ்த்துவதை முதல் மூன்று படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை நான்காவது படத்தில் காணலாம். (படங்கள்: நாயகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்நேரமும் இடிந்துவிழும் நிலையில் நூற்றாண்டு கண்ட பாடசாலைக் கட்டடம்



வலி.வடக்கு,ஜூன்5

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தின் சூனியப் பிரதேசத்தில் இயங்கும் பாடசாலை தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை.

1900ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையாகும் இது. இப்பாடசாலையின் கட்டட நிலைமை குறித்து பெற்றோர்களும் பழைய மாணவர்களும் பெரும் கவலை தெரிவிக்கின்றார்கள்.

இப்பாடசாலையின் கட்டடம் ஒன்று நூற்றாண்டு கண்ட கட்டடமாக இருப்பதாகவும் கடந்த காலங்களில் மிகவும் மோசமான இழப்புகளுக்கு உள்ளானதாகவும் கூறப்படுகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான பாடசாலைக் கட்டடங்கள் அரசின் ஆதரவுடனும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டும் உள்ளன.

இத்தகைய நிலைமையில் யுத்த காலத்தில் சிக்கித் தவித்து சேதம் அடைந்த இப்பாடசாலை கட்டடங்களும் முழுமையாக திருத்தப்படவேண்டிய தேவை இருந்தபோதிலும் அதனையிட்டு உரிய கவனம் எடுக்கப்படாமை இப்பகுதி மக்களிடம் கவலையையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

தமது பகுதியில் உள்ள இப்பாடசாலையும் ஏனைய பாடசாலைகளைப் போன்று புதுப்பொலிவு பெறவேண்டும் என இப்பகுதி மக்களும் பெற்றாரும் விரும்புகின்றனர். (86)

## பாஷையூர் அந்தோனியார் ஆலயப் பெருவிழா

யாழ்ப்பாணம்,ஜூன்5

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயப் பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நவநாள் வழிபாடுகள் தினமும் பிற்பகல் 4.45 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். நற்கருணை விழா எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும்.

திருவிழா தினமான எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5.15 மணிக்கு முதல் திருப்பலியும் காலை 6.30 மணிக்கு ஆயர் தலைமையில் விழாத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும். அன்றைய தினம் மாலை 4 மணிக்கு திருச்சொரூபப் பவனி இடம்பெறும். (202)

## உலக வதிவிட தினத்தை முன்னிட்டு சித்திரப் போட்டிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்5

உலக வதிவிட தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் வதிவிட நிறுவனம் சித்திரப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களில் இந்நிறுவனத்தின் உதவித் திட்டங்களைப் பெற்றுவரும் பயனாளிகளின் பிள்ளைகளுக்கே இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

பொலிகண்டி கிழக்கு, பொலிகண்டி மேற்கு, ஆதி கோயிலடி, ரேவடி, குடத்தனை, அல்வாய்மேற்கு, தொண்டைமானாறு வடக்கு, தொண்டைமானாறு தெற்கு, கெருடாவில், அல்வாய் வடமத்தி, வல்லை வடமேற்கு ஆகிய பிரதேசங்களிலுள்ள பயனாளிகளின் பிள்ளைகளுக்கே இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கைகள் அந்தந்த வீட்டுத்திட்ட சமூக அபிவிருத்திச் சபைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் - போட்டியில் பங்குபற்றுவதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 15ஆம் திகதி எனவும் நிறுவனத்தின் மாவட்ட முகாமையாளர் க.பரமேஸ்வரன் தெரிவித்தார். உலக வதிவிட தினம் ஒக்ரோபர் மாதத்தின் முதலாவது திங்கட்கிழமையாகும். (202)

# காணாமற்போனோரின் முறைப்பாடுகள் தொடர்பாக உரிய தரப்புகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை

## பொதுமக்களிடம் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



காணாமற் போனவர்களைப் பற்றி தினமும் தன்னிடம் முறைப்பாடுகள் வருகின்றன என்றும் யாழ். குடாநாட்டில் மட்டுமல்ல கொழும்பிலும் தினமும் இவ்வாறான முறைப்பாடுகள் நேரடியாகவும், கடிதங்கள் மற்றும் தொலைபேசி வாயிலாகவும் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதாகவும் இவ்விடயம் தொடர்பில் உரிய தரப்பினருடன் தொடர்பு கொண்டு தன்னால் இயன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்றாம் திகதி பொதுமக்களைச் சந்தித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கும்போது, காணாமற்போனவர்கள் விடயமாக யாழ்.குடாநாட்டில் தன்னிடம் வருகின்ற முறைப்பாடுகளை ஆராய்ந்து பார்க்கும்போது இதில் பெரும்பாலான முறைப்பாடுகள் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மக்களிடமிருந்தே முன்வைக்கப்பட்டு வருவதை தான் அவதானித்து வருவதாகவும், எனவே வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மக்கள் ஏதோ ஒரு வகையில் குறிப்பிட்ட ஒரு தரப்பினால் எதற்காகவோ பயன்படுத்தப்படுகின்றனர் என தான் சந்தேகிப்பதாகவும் தெரிவித்தார்.

மக்களின் வறுமைநிலை காரணம் காட்டி எவரும் அம்மக்களை தவறான வழிகளில் பயன்படுத்துவதை தான் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை எனச் சுட்டிக் காட்டியுள்ள அமைச்சர், மக்களின் பங்களிப்புக்களுடன் முன்னெடுக்கப்படுகின்ற தனது வேலைத்திட்டங்களின் மூலம் இவ்வாறான சம்பவங்களைத் தடுத்து நிறுத்த முடியும் என்றும் இதற்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்புக்கள் தனக்கு மிக அவசியமாகும் என்றும் தெரிவித்தார்.

எமது மக்களின் வறுமை நிலையை அகற்றி அவர்களுக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதற்கு தான் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதை உணர்த்திய அமைச்சர் டக்ளஸ், வெகுவிரைவில் குடாநாட்டில் பல்வேறு தொழில்வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்குத் தான் திட்டமிட்டுள்ளதாகக் தெரிவித்ததுடன் மக்கள் எவ்வகையிலும் நாசகார சக்திகளுக்கு இடமளிக்கக் கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

தனது உறவுகளும், தோழர்களும் இவ்வாறே காணாமற் போயுள்ளதாகவும் எனவே காணாமற்போனவர்களது உறவுகளின் வேதனையைத் தான் நன்கு உணர்வதாகவும் தெரிவித்த அமைச்சர் காணாமற் போனவர்கள் தொடர்பில் தான் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அதனால் நம்பிக்கையுடன் இருந்து கொள்ளும்படியும் காணாமற்போனவர்களின் உறவினர்களிடம் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தாயின் இதயத்துடிப்பினை குழந்தை நேசிப்பது போல நாம் எல்லோரும் இந்தப் பூமியை நேசிக்கவேண்டும்



செவ்விந்தியத் தலைவர் சீடில் தமது பாரம்பரிய தேசிய உடையில் காணப்படுகின்றார்

**134 ஆண்டுகளுக்கு முன்னர் செவ்விந்தியத் தலைவர் சீடில் கூறிய கருத்து**

செவ்விந்தியர்களைத் தோற்கடித்து அவர்களின் சொந்த நிலங்களை அமெரிக்க வெள்ளையர்கள் அபகரிக்க முனைந்தவேளையில் 1854ஆம் ஆண்டில் செவ்விந்திய மக்களை நோக்கி அம் மக்களின் தலைவர் சீடில் என்பவர் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதி இது.

மனிதனுக்கும் மண்ணுக்குமிடையிலான பிணைப்பினை இவ்வளவு ஆழமாகவும் அழகாகவும் இதுவரை எவரும் எடுத்துரைத்தது கிடையாது என்று கருதப்படுகின்றது. உலக சுற்றாடல் தினமான (ஜூன் 5) இன்று பொருத்தம் கருதி அதன் தமிழாக்கத்தைத் தருகின்றோம்

வாஷிங்டனிலிருக்கும் பெரிய தலைவர் செய்தி அனுப்பியிருக்கிறார், எங்கள் நிலங்களை தாம் விலைக்கு வாங்கப் போவதாகக் கூறி.

பெரிய தலைவர் எங்களுக்கு நல்லெண்ணமும் நட்புறவும் கூறி செய்தி அனுப்பியுள்ளார். இது அவர் அளவில் பெரிய விஷயம், ஏனென்றால் பிரதியுபகாரமாக எங்கள் நட்புறவு அவருக்கு அதிகம் தேவைப்படமாட்டாதென்பதை நாங்கள் அறிவோம்.

இருந்தாலும் உங்கள் முன்மொழிவை நாங்கள் பரிசீலித்துப் பார்ப்போம். ஏனென்றால்

## இன்றைய சுற்றுச்சூழலுக்கும் பொருந்துகிறது

நாங்கள் விற்க விரும்பாவிட்டாலும் வெள்ளையர்கள் துப்பாக்கிகளுடன் வந்து எங்கள் நிலங்களை எடுத்துக் கொள்வார்கள் என்று எங்களுக்குத் தெரியும்.

வானத்தையும் நிலத்தின் வெதுவெதுப்பையும் எவ்வாறு விலைக்கு வாங்கவோ அல்ல விற்கவோ முடியும்? இது எங்களுக்கு விசித்திரமாகத் தோன்று கின்றது.

காற்றின் புதுப்பொலிவையும் தண்ணீரின் பளிச்சிடும் தன்மையையும் எங்களால் சொந்தம் பாராட்ட முடியாதென்றால் உங்களால் எவ்வாறு அதனை விலைக்கு வாங்க முடியும்?

பூமியின் எல்லாப் பகுதிகளும் எமது மக்களுக்கு புனிதமானவையே. ஒளிக்கீற்றும் ஒவ்வோர் ஊசி மர இலையும், மணல் பரவிய கடற்கரைகளும், இருள்மயமான காடுகளில் காணப்படும் பனிமூட்டங்களும், ஒவ்வொரு பொட்டல் வெளியும் இசை எழுப்பும் வண்டுகளும் எமது மக்களின் மனங்களில், பட்டறிவில் புனிதமானவையே. மரங்களின் உள்ளே ஊறிச் செல்லும் சாறும் கூட செவ்விந்தியனின் நினைவை சுமந்து செல்கின்றன.

இறந்துபோகும் வெள்ளை மனிதர்கள் நட்சத்திரங்களின் மத்தியில் நடக்கத் தொடங்கியதும் தான் பிறந்த மண்ணை முற்றாக மறந்துவிடுகின்றனர். எமது முன்னவர்கள் ஒருபோதும் இந்த அழகான பூமியை மறந்து போவதில்லை. ஏனென்றால் இதுதான் செவ்விந்தியர்களின் தாயகம்.

### இந்த பூமியின் பாதியாக இருக்கின்றோம்

இந்த மண்ணின் ஒரு பாகமாகவே நாங்கள் இருக்கின்றோம். எங்களின் ஒரு பகுதியாகவே இந்த மண் இருக்கின்றது.

மணம் கமழும் மலர்கள் எல்லாம் எமது சகோதரிகள் , மான்கள், குதிரைகள், பெருங்கழுகு, இவை எமது சகோதரர்கள் , பாறைகளின் சிகரங்கள், புற்றரைகளில் காணப்படும் நீர்த்தன்மைகள், மட்டக் குதிரையின் உடலிலும் மனிதனின் உடலிலும் காணப்படும் உஷ்ணம் இவை யாவும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை.

ஆகவே வாஷிங்டனிலுள்ள பெரிய தலைவர் எமது நிலங்களை வாங்கப் போவதாக செய்தியனுப்பியிருப்பதானது, அவர் எங்களிடம் அதிகமாக வேண்டுகின்றார் என்பதாகும்.

எங்களுக்கென்று ஒரு பகுதியைச் ஒதுக்கி விடுவதாக பெரிய தலைவர் செய்தி அனுப்பியுள்ளார். நாம் அங்கு சௌகரியமாக வாழ முடியும் என்கிறார். அவர் எங்கள் தந்தையாகவும் நாங்கள் அவரது பிள்ளைகளாகவும் இருக்கலாம்.

ஆக, எமது நிலங்களை வாங்கப் போவதாக நீங்கள் தெரிவித்துள்ள முன்மொழிவை நாங்கள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்வோம், ஆனால் அது இலகுவான விடயம் அல்ல; ஏனென்றால் இந்த மண் எங்களுக்கு மிகவும் தெய்வீகமானது.

### ஆற்றில் ஓடுவது தண்ணீரல்ல முன்னோரின் இரத்தம்

ஆறுகளிலும் ஓடைகளிலும் பிரகாசித்து ஓடிக்கொண்டிருப்பது வெறும் தண்ணீர் அல்ல, ஆனால் அது எமது மூதாதையினரின் இரத்தமாகும். எனவே நாங்கள் எமது நிலத்தை உங்களுக்கு விற்போமானால் அது புனிதமானது என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இதை உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் படிப்பிக்கவேண்டும்- வாவிகளில் உள்ள தெளிந்த நீரில் தென்படும் ஒவ்வொரு பிரதி விம்பமும் எமது மக்கள் நினைவுகளின் - பழைய சம்பவங்களின் பிரதிபலிப்பு என்று தெரிவிக்கவேண்டும். தண்ணீரில் கேட்கும் சலசலப்புக்கள் எல்லாம் எனது அப்பாவின் தந்தையின் குரலாகும்.

ஆறுகள் எமது சகோதரர்கள், அவை எமது தாகத்தைத் தீர்த்து வைக்கின்றன. ஆறுகள் எமது ஓடங்களைக் கொண்டு செல்லுகின்றன. எமது பிள்ளைகளின் உணவைக் கொண்டு வருகின்றன. எனவே எமது நிலங்களை உங்களுக்கு கொடுத்தால், அவை எமக்கும் உங்களுக்கும் சகோதரர் என்பதை மறக்கலாகாது- உங்கள் பிள்ளைகளுக்கும் இதைச் சொல்லிக் கொடுக்கவேண்டும். இதன் பிறகு சொந்த சகோதரனைப் போல அவைகள் மீது அன்பு செலுத்தவேண்டும்.

### இந்த மண் எங்களுக்கு தெய்வீகமானது!

வெள்ளை மனிதன் முன்னேறி வரும் போதெல்லாம் சிவப்பு மனிதன், மலைகளிலுள்ள பனிமூட்டம் சூரியனைக் கண்டு மறைவதுபோல பின்வாங்கி ஓடிக் கொண்டிருக்கின்றான். ஆனால் எமது மூதாதையரின் சாம்பல்கள் புனிதமானவை. அவர்களின் புதைகுழிகளும் புனிதமான இடங்களாகும். எனவேதான் இந்த மலைகள், இம்மரங்கள், இந்நிலத்தின் இப்பகுதிகள் எல்லாம் எம்முடன் இணைந்தவை. எங்களுக்குத் தெரியும் எங்களின் நடைமுறைகளை வெள்ளையர்கள் அறியமாட்டார்கள் என்று. நிலத்தின் ஒரு பகுதியானது அதேபோன்று இன்னொரு பகுதியைப் போன்றதே என்று அவன் நினைக்கின்றான். ஏனென்றால் இரவில் வருகின்றான் தனக்கு வேண்டியதை எமது நிலத்திலிருந்து எடுத்துக்கொண்டு போய்விடுகின்றான் - அவன் எமக்குப் புதியவன். பூமி அவனுக்கு சகோதரனல்ல. அவனுடைய விரோதி. அதை வெற்றி கொண்டதும் மேலும் முன்னேறுகிறான். தன் தந்தையர்களின் புதை குழிகளை பின்னால் ஒதுக்கிவிட்டு போய்க் கொண்டிருக்கிறான். தந்தையரின் சமாதிகளைப்பற்றி அவன் கவலைப்படுவதில்லை. பிள்ளைகளின் பிறப்புரிமை மறக்கப்பட்டு விடுகின்றது.

தாய் மண்ணை, வானமாகிய சகோதரனை எல்லாம் செம்மறி ஆடுகளையும் அழகு மணிகளையும் போல விலை கொடுத்து வாங்கலாம், விற்கலாம் என்று நினைக்கின்றான் வெள்ளையன். அவனுடைய பசி வேட்கையானது நிலத்தைக் கபளீகரம் செய்துவிட்டு பாலைவனம் தான் மிஞ்சுவதாக இருக்கும்.

தமிழில் - சிபெரு

(12ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

எமது சக ஊழியர்

## யோகரத்தினம் கீதன்

(Operation Executive- Ceylinco Life)



புன் சிரிப்போடு வேலை செய்த கீதனே!
எம் இதயங்களில் இடம்பிடித்த ஜீவனே!
எம் கண்கள் பார்த்து கதை பேசி மகிழ்வாய்
கொழும்பு மாநகர் சென்றாலும் எமைப் பார்க்க யாழ் .நகர் வருவாய்
இனி எமைப்பார்க்க யார் வருவார் எம் இனிய கீதனே!
உன் உயிர் பிரிந்த செய்தி கேட்டு எம் உள்ளங்கள்
வெந்து போகுதைய்யா! எமை விட்டு இடையினில் நீ
செல்வதற்கா இனிமையாய்ப் பழகினாய்
உன் முகத்தினை நாம் தேட கைகளை கணனிகள் தேடுகிறதே
கீதா உனக்கு என்ன கஷ்டம் இருந்தாலும்
நல்ல கனிவான சேவை செய்வாய் நீதி, நேர்மை, நெஞ்சுறுதி
எல்லாம் உனக்குள் வளர்த்துக் கொண்டாய்
உனக்கு என்ன நன்மை கிடைத்தாலும் அதை மற்றவர்களுக்கும்
கிடைக்கச் செய்வாய் இன்றோ எமக்கு ஆறாத சோகம்தனை
தந்துவிட்டு சென்றாய் பாசம் எனும் கயிற்றால் எமை
கட்டிப் போட்டவனே நல்ல உத்தமனாய் வாழ்ந்து இம்மண்ணில்
நீ வித்தாகி போனாலும் என்றுமே
எம் மனங்களில் நீ அழியாத சொத்தாகிப் போனாய்.

மலர்வு
04.06.1980

உதிர்வு
31.05.2008

செலிங்கோ ஆயுட்காப்புறுதி ஊழியர்கள்,
யாழ்.மாவட்டம்.

(75105)

# பத்தாம் ஆண்டு நினைவுஞ்சலி

அமரர்

## சின்னத்தம்பி நமசிவாயம்

(உரிமையாளர், சிவகுமார் ஸ்ரோர்ஸ்,
சமாதான நீதிவான்)

அன்னை மடியில் : 10.03.1942 அநியாய அழிப்பில் : 05.06.1998

திதி : 14.06.2008



நிலை மாறும் உலகில் நிலைப்பதில்லை நீதி- ஆதலால்
நல்லவர் வாழ்க்கை நான்கு நாள்கள் தான்- இது
நாம் நேரில் கண்ட உண்மை
வாய்மையை நேர்மையை உழைப்பை
உன் அணி கலனாய்க் கொண்டு
மக்கள் நலனுக்காய் மகிழ்வுடன் உழைத்தவரே!
உண்மையை எடுத்துரைத்து நேர்மையால்
நெஞ்சை நிறைத்த எங்கள் தந்தையே!
வணிகர் வாழ்க்கைக்கு வளம் சேர்க்க
வர்த்தக செயலாளர் ஆனீரே- உன்
உயர்ந்த உள்ளம் கண்ட நெஞ்சங்கள்
உனைப் பல்லக்கில் சுமக்கப் பார்த்திருக்க
பாதியில் பாதையில் உங்கள் விதியை
சதி முந்தியதோ!
அவனியில் ஆண்டுகள் பத்தாய் ஆனது
அப்பாவே! உங்கள் அன்பிற்காய்
ஈழத்துச் சுந்தரேசனை நேசித்த நமசிவாயம்
அல்லவா நீங்கள்
அவன் பாதம் பணிந்து உமைக் காண்கின்றோம்
ஏந்தலே! எங்கள் பிதாவே!.

'சிவசக்தி வாசம்',
20/11, வைரவர் கோயில் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021-222 7687.

உங்கள் ஆத்ம சாந்தியை வேண்டிப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/553110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

1ST HAPPY BIRTH DAY



அரியாலை மேற்கைச் சேர்ந்த வாகீசன் - நிகேதா தம்பதியின் செல்வப் புதல்வி வைஷாலி இன்று திருகோணமலையில் உள்ள தனது இல்லத்தில் முதலாவது பிறந்த நாளை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

எங்கள் செல்லக்குட்டியை அப்பா, அம்மா, அண்ணா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பூட்டப்பா, மாமா ஆதித்தன்(லண்டன்), சித்திமார்கள் (துவாரகா, மேகலா, நர்மதா), அத்தை ஆனந்தி குடும்பம் (லண்டன்), பெரியப்பா கேசவன் குடும்பம், ஆசையப்பா சபேசன் குடும்பம்(கனடா), சின்ன அம்மம்மா சறோ குடும்பம், பெரிய தாத்தா ஜெயம் குடும்பம்(லண்டன்), சின்னத்தாத்தா தேவதாஸ் குடும்பம் (லண்டன்) மற்றும் அனைவரும் புவனேஸ்வரி அம்பாள் துணையுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
வி. இராசையா(அம்மப்பா),
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

## செல்வி வைஷாலி வாகீசன்
05.06.2008


# தென்மராட்சி ஆசிரியர்களுக்கு நடனபாடத் தரவட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்5

தென்மராட்சி கல்வி வலையப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களில் நடன பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான நடனபாடத் தரவட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடை பெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் தெரிவித்தார். (202- 207)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 23 08 1960 — மறைவு 06 05 2008



## அமரர் நடராஜா இரவிச்சந்திரன்

திதி: 05.06.2008
தரணியில் தருமர் என்று
தன்னகத்தே நட்புக் கொண்டு
மாசறு மணமாய் மக்கள்
மற்றவர் மகிழ வாழ்ந்து
வீசும் புயலாய்ச் சோகம்
விரிய ஏன் பிரிந்தீர் ஐயா!

இல.41/3,
கொண்டலடிவீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
மனைவி,
பிள்ளைகள்.


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

990 நீலம்

வெற்றி இலக்கங்கள்

துலாம் 03 24 26 28

03-06-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 4838125 - 4851573

ஜக்பொட் பரிசு ரூபா.1,718,850/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 275,293 | 10/- | 2,752,930/- |
| 2 இலக்கங்கள் | 25,364 | 20/- | 507,280/- |
| 1 இல. + லக்கினம் | 25,125 | 30/- | 753,750/- |
| 2 இல. + லக்கினம் | 2,246 | 100/- | 224,600/- |
| 3 இலக்கங்கள் | 674 | 500/- | 337,000/- |
| 3 இல. + லக்கினம் | 72 | 5,000/- | 360,000/- |
| 4 இலக்கங்கள் | 1 | 100,000/- | 100,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,718,850/- | - |
| மொத்தம் | | | 5,035,560/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 328,780 | | 5,535,560/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,333,800/-

தொடர் இல. 5738727 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 ஜூன் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| ஹம்பாந்தோட்டை | 4842656-9-44 |
| கண்டி | 4845563-8-41 |
| பதுளை | 4840686-4-82 |
| மாத்தறை | 4848629-6-67 |
| அனுராதபுரம் | 4843216-5-35 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


# சேக்கிழார் குருபூசை

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்.சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் சனிக் கிழமை நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சேக்கிழார் குருபூசை நடை பெறவுள்ளது. (202)

# இளைஞர்கள் சிரமதானம்

சுழிபுரம்,ஜூன்5

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய உற்சவத்தை முன்னிட்டு ஆலய தொண்டர் சபை இளைஞர்கள் கோயில் வீதிகளைச் சிரமதானப் பணி மூலம் சுத்தம் செய்துள்ளனர்.

ஆலயக் கொடியேற்றம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202)

# சேர்த்து வாசிக்கவும்

உள்ளே 6 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள வைரமுத்து வடிவேலு என்பவரின் மரண அறிவித்தலில் சில பெயர்கள் தவறவிடப் பட்டுள்ளன.

காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, வீரபாகு, ஆறுமுகம், மீனாட்சி, சரஸ்வதி, சின்னம்மா ஆகியோரின் சகோரதனும் ஆவார் என்பதனைச் சேர்த்து வாசிக்கவும்.


# எம்புறோடிங் ரை



நீண்டகால பாவனைக்கு உத்தரவாதம்

பாடசாலை மாணவர்களுக்குரிய ரை

69.00 லிருந்து

எஸ் . எஸ். யசோதரன் ஆட்ஸ்
212,கோவில் வீதி, நல்லூர்


# தவறிவிட்டது

கொல்லன்கலட்டி, பெரியாவோடை, தெல்லிப்பழையை நிரந்தர முகவரியாகவும், வேதாரணியம் வளவு, உடுவில் கிழக்கு சுன்னாகம் என்னும் முகவரியில் தற்போது வசிப்பவருமான சுந்தவனம் சிவராசா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (480761774V), விசேட அடையாளஅட்டை (0907007176) ஆகிய இரண்டும் மருதனார்மடம், உடுவில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும்.

# இருபதாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 22 07 1933 — மறைவு 17 05 1988



## கதிரேசு நவரத்தினம் (ரத்தினம்)

திதி: துதியை 05.06.2008

எங்கள் ஆருயிர் தெய்வமே!
எங்களைப் பிரிந்து இருபது ஆண்டுகள் சென்றுவிட்டன
உங்களை நாங்கள் இருபது நிமிடமும் மறந்திருக்கவில்லை
உங்கள் பிள்ளைகளின் செல்வங்களின் மழலைகளையும்
மருமக்களின் அன்பான வார்த்தைகளையும் கேட்டு
மகிழாமல் பாதி வயதில் பறந்து விட்டீர்களே!
உங்கள் பிள்ளைகளின் குடும்பங்களுக்கு தெய்வமாக நின்று
ஆசீர்வதிக்கவும்
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வணங்குகின்றோம்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (75006)

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

# கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய
## வருடாந்த மஹோற்சவம் - 2008

மேற்படி ஆலய மஹோற்சவம் 08.06.2008 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19.06.2008 பூங்காவனத்துடன் நிறைவுபெறும்.

### மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | |
|---|---|
| 08.06.2008 | ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றம் |
| | வசந்த மண்டபப் பூஜை காலை 9.00 மணி |
| 10.06.2008 | செவ்வாய்க்கிழமை மஞ்சத் திருவிழா. |
| | வசந்த மண்டபப் பூஜை மாலை 3.30 மணி |
| 14.06.2008 | சனிக்கிழமை கைலாயவாகனத் திருவிழா |
| | வசந்த மண்டபப் பூஜை மாலை 3.30 மணி |
| 16.06.2008 | திங்கட்கிழமை சப்பறத்திருவிழா |
| | வசந்த மண்டபப் பூஜை மாலை 3.30 மணி |
| 17.06.2008 | செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழா |
| | வசந்த மண்டபப் பூஜை காலை 7.00மணி |
| 18.06.2008 | புதன்கிழமை தீர்த்தோற்சவம் |
| | வசந்த மண்டபப் பூஜை காலை 7.00மணி |
| 19.06.2008 | வியாழக்கிழமை பூங்காவனத் திருவிழா |
| | வசந்த மண்டபப் பூஜை மாலை 4.30 மணி |

மஹோற்சவகால கடைகளுக்குரிய நில ஒதுக்கீடு 06.06.2008 வெள்ளிக்கிழமை பி.ப 4.30 மணி முதல் இடம்பெறும்.

நந்தாவில்,
கொக்குவில்

ஆலய பரிபாலன சபையினர்

# ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
## முருகுப்பிள்ளை விக்ரர் அரியரத்தினம்

அன்னை மடியில் 12.06.1927 — ஆண்டவன் மகிமையில் 05.06.2007



ஒளி சொரிந்த வதனமொடு உதடுகளில் புன்சிரிப்பு
தெளிவான பேச்சாற்றல் சிந்தனையோடு சிகரம்தான்
தனிவாகக் கற்பித்துக் கல்விக்கு உரம் சேர்த்தீர்
மனிதமதை நேசித்து மனங்களிலே உறைகின்றீர்
பிள்ளைகளை கல்விக்கே அர்ப்பணித்த பேறுடையீர்
வாடா மலராய் வாழும் வதனம் என்றும் மறையாதே!

தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாயின் இதயத் துடிப்பினை....**
*(9ஆம்பக்கத் தொடர்ச்சி)*

**விலங்குகள் இல்லாமல் என்ன பயன்?**

விலங்குகள் இல்லாமல் மனிதனால் என்ன பயன்? மிருகங்கள் எல்லாம் அழிந்து விட்டால் மனிதனின் ஆன்மா பெரும் தனிமைத் துன்பத்துக்குள்ளாகி அழிந்து விடும். ஏனென்றால் விலங்குகளுக்கு என்ன நேருகின்றதோ அதுவே பிற மனிதனுக்கும் நேர்கின்றது. எல்லாமே ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள், உங்கள் பாதங்களுக்குக் கீழே எமது மூதாதையரின் சாம்பல் இருக்கின் றது என்று. அப்பொழுது அவர்கள் நிலத்தை மதிப்பார்கள். எமது உறவினர்களின் உயிர்களால் இந்த மண் வளமாக உள்ளது என்று கூறுங்கள். எமது உறவுகளுக்கு நாம் கூறியதை உங்கள் பிள்ளைகளுக்கும் நீங்கள் சொல்லுங்கள். எமது மண்ணுக்கு எது நேர்ந்தாலும் அதன் பிள்ளைகளுக்கும் அதே நேரும். மண்ணின் மீது நீங்கள் துப்பினால் உங்கள் மீதே துப்பிக்கொள்கிறீர்கள். பூமியானது மனிதனுக்குச் சொந்தமானது அல்ல என்பது எங்களுக்குத் தெரியும். மனிதன் மண்ணுக் குரியவன். எல்லா பொருள்களும் இணைக்கப்பட்டுள்ளன. இரத்தம் ஒரு குடும்பத்தை இணைப்பதைப் போல எல்லாப் பொருள்களுமே இணைக்கப்பட்டுள்ளன.

எங்கள் வழிமுறைகள் உங்களுடைய முறைகளிலிருந்து வேறானவையா என்று எனக்குத் தெரியவில்லை. உங்கள் நகரங்களைப் பார்க்கும்போது சிவப்பர்களின் கண்கள் வலிக்கின்றன. அது ஒருவேளை சிவப்பர்கள் நாகரிகமற்றவர்களாய், விளங்கிக்கொள்ள முடியாதவர்களாய் இருப்பது காரணமாக இருக்கலாம்.

வெள்ளைக்காரரின் நகரங்களில் அமைதி இல்லை: வசந்த காலத்தில் இலைகள் துளிர்க்கும் ஒலியைக் கேட்க முடிவதில்லை. வண்டுகள் சிறகடிக்கும் சலசலப்பை கேட்க முடிவதில்லை, இது சிவப்பர்கள் நாகரிகமற்றவனாய் அல்லது ஒன்றையும் விளங்கிக் கொள்ள முடியாதவனாய் இருப்பது காரணமாகலாம். ஆனால் ஓசைகள் எல்லாம் காதுகளை ஏளனப்படுத்துவதாகவே உள்ளன. இரவில் கத்தும் கூகையின் கவலை தோய்ந்த தனித்து போன குரலை அல்லது இரவில் குளத்துக் கரையில் தவளைகள் ஓலமிடுவதையும் கேட்க முடியாது போனால் ஒரு மனித வாழ்வில் என்ன இருக்கிறது? நான் செவ்விந்தியன் எனக்கு இது விளங்கவில்லை.

ஒரு பொய்கையின் மீது இளம் காற்று தவழ்ந்து போகும் சத்தத்தைக் கேட்க செவ்விந்தியன் மகிழச்சியடைகின்றான். அதே போல் பகல்வேளை பெய்யும் மழையினால் கழுவப்பட்ட காற்றின் மணத்தை அல்லது ஊசிமர இலைகளால் மணம் ஏற்றிக் கொண்ட காற்றை நுகர்வதற்கு அவன் விரும்புகின்றான்.

சிவப்பு மனிதனுக்கு காற்று மிகவும் பெறுமதியானது. விலங்குகள், மரங்கள் மற்றும் எல்லாமே இந்த சுவாசத்தைப் பகிர்ந்துகொள்கின்றன. வெள்ளையன் தான் சுவாசிக்கும் காற்றைப் பற்றி கவலைப்படுவதாகத் தெரியவில்லை. ஆனால் நாங்கள் எமது நிலத்தை உங்களுக்கு விற்றால் எமக்கு காற்று மிகவும் பெறுமதிமிக்கது என்பதை நீங்கள் மறக்கக் கூடாது. காற்றானது தான் உதவும் எல்லா உயிர்களோடும் தன் ஆத்மாவைப் பகிர்ந்துகொள்கின்றது. எமது பாட்டனுக்கு முதல் மூச்சைக் கொடுத்த காற்றானது அவரது கடைசி ஏக்க மூச்சையும் வாங்கிக்கொள்கின்றது. எமது பிள்ளைகளுக்கும் இந்தக் காற்று வாழ்வின் ஆன்மாவை வழங்கவே செய்யும். ஆகவே நாங்கள் எங்கள் நிலத்தை உங்களுக்கு விற்றால் அதைத் தனித்துவமான புனிதத்தோடு பார்த்துக்கொள்ளவேண்டும்.

உங்கள் முன்மொழிவை நாங்கள் ஏற்றுக் கொண்டால் நான் ஒரு நிபந்தனையை முன் வைப்பேன், இந்த நிலத்தின் விலங்குகளை தனது சகோதரங்கள் போல் அவர்கள் கவனிக்கவேண்டும். நான் ஒரு காட்டு மிராண்டி. வேறு எதுவித வழியும் எனக்குத் தெரியவில்லை. ஆயிரக் கணக்கான எருமைகள் புல் தரைகளில் அழுகிக்கொண்டு கிடப்பதை நான் பார்த்துள்ளேன். ரயிலில் பிரயாணம் மேற்கொண்ட வெள்ளையர்கள் புல்வெளிகளைக் கடந்து செல்கையில் இவைகளைச் சுட்டுத்தள்ளியிருக்கிறார்கள். எருமைகளை உணவுக்காக மட்டுமே நாங்கள் கொல்வோம். ஆனால் புகையைக் கக்கும் இரும்புக் குதிரைகள் இந்த எருமைகளை விட முக்கியமானவையா என்பது எனக்கு விளங்கவில்லை. நான் காட்டுமிராண்டியாய் இருப்பது காரணமாய் இருக்கலாம். எனக்கு விளங்கவில்லை என்றாலும் எங்கள் மக்களுக்காக நிலம் ஒதுக்கித்தருவதாக நீங்கள் கூறுவதை நாங்கள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்வோம். தேவையானால் நாங்கள் வெவ்வேறாக வாழலாம். எமது எஞ்சிய காலத்தை எங்கு கழிக்கப்போகிறோம் என்பது பெரிய விடயமல்ல: எமது பிள்ளைகள் தமது பெற்றோர் எவ்வாறு தோற்கடித்து பணிய வைக்கப்பட்டார்கள் என்பதை நேரில் கண்டுள்ளார்கள். எமது போராளிகள் தோல்வியுற்றதின் பின் வெட்கமடைந்து காலத்தை வீணே கழித்து வருகிறார்கள். கடும் பானங்களை அருந்தியும் இனிப்புப் பண்டங்களை அருந்தியும் உடல்களைப் பாழ்படுத்திக்கொண்டு வருகின்றார்கள். எமது மிச்சமுள்ள காலத்தை எங்கே கழிக்கப்போகின்றோம் என்பது பெரிய விடயமல்ல. அதுவும் வெகுகாலமில்லை.

இன்னும் அதிகம் போனால் சில மணி நேரங்கள், சில குளிர்காலங்கள் இந்த மண்ணில் ஒரு காலத்தில் வாழ்ந்த பெருங்குடி மக்களின் பிள்ளைகளில் - காடுகளில் ஆங்காங்கே தரித்திருந்தவர்களில் ஒரு சிலர் தான் அந்த வீரமிக்க மூதாதையரின் சமாதிக ளில் சோகம் இசைப்பதற்கு எஞ்சியிருப்பார் கள். ஆனால் எனது மக்கள் இல்லாது போவ தைப் பற்றி நான் ஏன் கவலைப்படவேண்டும். பழங்குடிகள் மனிதர்களால் ஆனவை வேறு ஒன்றும் இல்லை. கடல் அலைகளைப் போல் மனிதர்கள் வருவார்கள் போவார்கள்.

வெள்ளையர்களும் கூட அவர்களின் கடவுள் அவனோடு சமமாக நடப்பார்- கதைப்பார் நண்பனைப் போல - ஆனால் பொது விதியை அவனாலும் தவிர்க்கமுடியாது.

**கடவுள் யாருக்கும் ஒருவரேதான்**

எதுவானாலும் நாம் சகோதரர்களாக இருக்கலாம். ஒரு விடயம் எங்களுக்குத் தெரியும்- வெள்ளையரும் ஒருநாள் உணர்வார்கள்- எமது கடவுளும் ஒரே கடவுள் தான். எமது நிலத்தை சொந்தமாக்கிக்கொள்ளப் பார்ப்பது போல் கடவுளையும் சொந்தம் கொண்டாடப் பார்க்கலாம். ஆனால் முடியாது.

அவர் மனிதனின் கடவுள். அவரது கருணையானது சிவப்பு மனிதனுக்கும் வெள்ளை மனிதனுக்கும் சமமானதே. இந்தப் பூமி அவருக்கு பௌத்திரமானது. அதற்குத் தீங்கிழைப்பது படைத்தவனை நிந்திப்பதாகும். வெள்ளையர்களும் இல்லாமல் போவார்கள். ஒருவேளை மற்றவர்களுக்கு முன்னரே இது நடக்கலாம். உன் படுக்கையைத் தொடர்ந்து அசுத்தமாக்கி வந்தாயானால் உன் சொந்த அழுக்காலேயே மூச்சுத் திணறிச் செத்துப் போவாய்.

எனவே உங்கள் முன்மொழிவைப் பற்றி நாங்கள் ஆலோசித்துப் பார்ப்போம். நாங் கள் சம்மதித்தால் நீங்கள் ஒதுக்கும் நிலப் பரப்பை நாம் ஏற்றுக்கொள்வோம். அங்கே சிறிது காலம் நாங்கள் வாழ்வோம். கடைசி செவ்விந்தியன் இந்த மண்ணிலிருந்து மறையும்போது, புல் தரைகளுக்கு மேலாக நகர்ந்து செல்லும் மேகத்தின் நிழல் போல அந்த நினைவுகள் மறையும்போது இந்தக் காட்சிகளும் காடுகளும் எனது மக்களின் ஆத்மாவை அந்தவேளையில் தாங்கி நிற்கும். ஏனென்றால் புதிதாகப் பிறக்கும் குழந்தையானது தனது தாயின் இதயத்துடிப்பை உணர்ந்து நேசிப்பது போன்று இந்த மண்ணை அவர்கள் நேசிக்கின்றார்கள். எனவே எமது நிலத்தை எடுத்துக்கொள்ளும் நீங்களும் அதை நேசியுங்கள். எங்களைப் போலவே உங்கள் குழந்தைளுக்காகவும் அதை நேசியுங்கள். நம் எல்லோரையும் கடவுள் நேசிப்பது போன்று நேசியுங்கள்.

ஒரு விடயம் எங்களுக்குத் தெரியும். நம் எல்லோருக்கும் ஒரே கடவுள்தான். இந்த பூமி அவருக்குப் பெறுமதியானது. வெள்ளை மனிதனாலும் பொது விதியை மீறி விட முடியாது. எதுவானாலும் நாம் சகோதரர்களாய் இருப்போமாக. ✱

---

## அறுபதாவது பிறந்தநாள் வாழ்த்து



(05.06.2008)

அல்வாய், 'ஸ்ரீ பவன்' ஐச் சேர்ந்த

**திரு.சீனித்தம்பி இராசநாயகம்**

(ஓய்வுபெற்ற நிதி உதவியாளர்-F.A. பிரதேச செயலகம்,பருத்தித்துறை)

*பெருமிதம் கொள்ளுகின்றோம்! பேறெனவே மகிழ்கின்றோம்!*
*பண்பிலுயர் தந்தையாய் உங்களை பெற்றதனால்*
*விருப்புடனே கணிதம், ஆங்கிலம், சிங்களம்,*
*விளையாட்டு, நாடகங்கள் யாவிலுமே தேர்ச்சியுற்று*
*கருத்துடனே கற்பிக்கும் உயர்ந்த ஆசானாய்!*
*குவலயமே போற்றும் எமதினிய அப்பாவை*
*பெருமையுடன் அறுபதாவது அகவைதனை கொண்டாடி*
*புகழோங்க வாழ்த்துகின்றோம்! பூரிப்பால் நிறைகின்றோம்.*

அல்வாய். (75110) அன்புடன் பிள்ளைகள்.

---

## 59ஆவது பிறந்தநாள் நினைவுகளும் 35ஆம் நாள் நினைவஞ்சலியும்

| மண்ணகம் | விண்ணகம் |
|---|---|
| 05 | 01 |
| 06 | 05 |
| 1949 | 2008 |



திருமதி

**கனகசபாபதி திலகவதி**

(உசன்)

**சிந்தனை எல்லாம் எம் நல்வாழ்வும்**
**கந்தனை நாளும் ஏத்தும் பணியுமேயான**
**உந்தன் ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.**
*ஓம் சாந்தி!*

எமது அன்னையின் பிரிவின் துயரில் எம்முடன் பங்கெடுத்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

**குடும்பத்தினர்.** (75109)

---

## சுழிபுரத்தில் நல்லெண்ணெய் 600 ரூபாவுக்கு விற்பனை

சுழிபுரம், ஜூன்5

சுழிபுரம் பகுதியில் ஒரு போத்தல் நல்லெண்ணெய் 600 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

சுழிபுரம் பிரதேசத்தில் எள் செய்கை இம்முறை நல்ல விளைச்சலைத் தந்துள்ளது. இதையடுத்து சில செய்கையாளர் தாமே செக்கில் எண்ணெய் வடித்து விற்பனை செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-28)

## கல்விக் கண்காட்சி

கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் கல்விகற்கும் மாற்று ஆற்றலுள்ள மாணவர்களின் கல்வி கண்காட்சி பாடசாலை மண்ட பத்தில் எதிர்வரும் திங்கள் செவ்வாய்க்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது. (202-28)

## விற்பனைக்கு

உபயோகித்த மேசைகள், கட்டில்கள் மற்றும் தளபாடங்கள், 20" நஷனல் T.V., HeroHonda, CD Dawn மோட்டார் சைக்கிள் , கேபிள் ரெலிபோன், கசற், ரேடியோ என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 5414. (75113)

## தவறிவிட்டது

சூடாமணி விக்கினேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (620733725X புன்னாலைக்கட்டுவன் வடக்கு, சுன்னாகம்) சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் பேரூந்தில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் தந்துதவவும். முனியப்பர் கோயில் வீதி, கே.கே.எஸ்.வீதி கோண்டாவில் மேற்கு கோண்டாவில். (75112)

## தேவை

போட்டோஸ்ரற் பிரதி செய்யும் கடைக்கு வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. (பழக விரும்புபவர்களும்).

**"பிரகாந்தி",**
56B, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P.:021 222 3184. (75114)

## தேவை

புடைவை வியாபார நிலையம் ஒன்றிற்கு பழக விரும்புபவர்கள் அல்லது அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 155, 156, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.: 021 222 3525, 077 3086894

## தவறிவிட்டது

வட்டு.வடக்கு சித்தங்கேணியைச் சேர்ந்த சிவநாதன் யுகந்தினி என்பவரது தே.அடையாள அட்டை (897511378V) மாவடிச் சந்திக்கும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் [illegible] (75113)

---

## கண்ணீர் அஞ்சலி



31.05.2008 அன்று அகால மரணமடைந்த எமது சகதோழன்

**யோ.கீதன்**

அவர்களின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உங்கள் மாணவர்கள், சிங்கப்பூர்.** (சி/553123)

## இதய அஞ்சலி



**யோ.கீதன்**

இனிமையான பேச்சும் இரக்க குணமும்
இறவாத சிரித்த முகமும்
இன்னமும் எம் கண் முன்னே நிற்க
இடியான செய்தி தந்து மறைந்தாயோ தோழா!
உயிருள்ளவரை எம் நெஞ்சத்தில் நிலைத்திருக்கும் நண்பா!
உடலால் நீ எம்மை விட்டு பிரிந்தாலும்
உணர்வாய் நட்பாய் எம்மோடு என்றும் இருப்பாய்.
உன் பிரிவால் தவிக்கும் உன் தாய், தந்தை, உன் பிறப்புக்களுடன் நாங்களும்
உன் பிரிவால் உறையும்...

**சிங்கப்பூர் (ZION) வாழ் பொறியியல் நண்பர்கள்.** (சி/553124)

## கண்ணீர் அஞ்சலி



தேசிய சேமிப்பு வங்கி- மானிப்பாய்க் கிளை முகாமையாளர்

அமரர் **ப.சச்சிதானந்தம்**

**அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.**

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டின் பொருளிற்கு உதாரணமானவர்!
தொழிலின் மகிமைக்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர்!
நறிக்கோள் தவறாது மக்கள் சேவையே மகேசன் சேவையென வாழ்ந்தவர்!
சேமிப்பு வங்கிச் சேவையை மக்களின் தேவைக்கேற்ப வழங்கியவர்!
வாடிக்கையாளரின் தேவையே தனது சேவையெனப் பணியாற்றியவர்!

இவ்வாறு பல நற்குணங்களைப் பெற்ற ஒரு கடமை வீரரை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள், தேசிய சேமிப்பு வங்கி உத்தியோகத்தர்களுக்கும் எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி!*

யாழ்.வீதி, மானிப்பாய். [75111]

சுந்தர்சன் உரிமையாளர், உத்தியோகத்தர்கள்.

## வேறொருவரின் படம்



02.06.2008 ஆம் திகதிய உதயனில் சிவஸ்ரீ தி.மாணிக்கவாசகக் குருக்களுக்கு அனைத்துலக சைவக்குருமார் அர்ச்சகர் பேரவை வெளியிட்ட கண்ணீர் அஞ்சலி விளம்பரத்தில் பிரசுரமான படம் அவருடையதல்ல. வேறொருவருடையதாகும். அதன் பொருட்டு இங்கே காலஞ்சென்ற மாணிக்கவாசகக் குருக்களின் படத்தை வெளியிடுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் பாடசாலைகளுக்கு உதவிவரும் திட்டத்தின் கீழ் வல்வை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு நேற்று கற்றல் உபகரணங்கள், உடுபுடைவைகள், தளபாடங்கள் என்பன அன்பளிப்புச் செய்யப்பட்டன.

வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றினார். சிறப்பு விருந்தினராக சிரேஷ்ட பொலிஸ் சுப்ரின்டெண்ட் எஸ்.கருணரத்னா கலந்து கொண்டார்.

பிரதம விருந்தினர் பூஜித ஜெயசுந்தர, சிறப்பு விருந்தினர் எஸ்.கருணரத்னா, பாடசாலை அதிபர் எஸ்.கண்ணதாசன் ஆகியோர் தேசியக் கொடி, பொலிஸ் கொடி, பாடசாலைக் கொடி ஆகியவற்றை ஏற்றுவதை முதலாவது படத்தில் காணலாம்.இரண்டாவது படத்தில் பிரதம விருந்தினர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர மாணவி ஒருவருக்கு கற்றல் உபகரணங்களை வழங்குகிறார்.

சிறப்பு விருந்தினரான சிரேஷ்ட பொலிஸ் சுப்ரின்டெண்ட் எஸ்.கருணரத்னா விளையாட்டு உபகரணங்களை வழங்குவதை மூன்றாவது படத்தில் காணலாம்.

நான்காவது படத்தில் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்கள், பெற்றோர், மாணவர்களைக் காணலாம்.

# கொக்குவில், நந்தாவில் பகுதிகளில் நேற்றிரவு 10 பேர் கொண்ட கொள்ளையர் கோஷ்டி கைவரிசை

யாழ்ப்பாணம், ஜூன் 5

கொக்குவில், நந்தாவில் பகுதிகளில் நேற்று விடிகாலை ஒரு மணியளவில் கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

அப்பகுதியிலுள்ள மூன்று வீடுகளில் கதவுகளை உடைத்துக் கொண்டு நுழைந்த சுமார் 10இற்கும் மேற்பட்டோரைக் கொண்ட கும்பலே இந்தக் கொள்ளைகளை நடத்தியுள்ளது.

முதலில் அப்பகுதியில் வசிக்கும் ஆசிரியர் ஒருவரது வீட்டில் நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்த பெறுமதி மிக்க தங்க நகைக்ளையும் பணத்தையும் கொள்ளையிட்டுள்ளனர். கொள்ளையர்கள் வீட்டின் மின்விளக்குகளை அடித்த நொறுக்கியதுடன் தொலைபேசி இணைப்பையும் துண்டித்துள்ளனர். அதனால் அங்கு இருள் சூழ்ந்தது. வெளிச்சத்துக்காக கட்டில், மெத்தைகளை தீமூட்டி எரித்துள்ளனர்.

தொடர்ந்து அயல் வீட்டினுள் நுழைந்த கொள்ளையர்கள் அங்கு பெறுமதி மிக்க தங்க நகைகளை கொள்ளையிட்டனர். பெண்கள் மற்றும் குழைந்தைகள் அணிந்திருந்த நகைகளைக் கூட விட்டுவைக்காமல் அவற்றை கொள்ளையர்கள் பிடங்கி எடுத்தனர் என்று கூறப்பட்டது. வீட்டில் இருந்த இலத்திரனியல் பொருள்களை அடித்து நொறுக்கியும் கொள்ளையர்கள் அட்டகாசம் புரிந்துள்ளனர்.

இதேவேளை, அப்பகுதியில் வசிக்கும் யாழ்.மாவட்ட மேற்பார்வைப் பொதுச் சுகாத்ார பரிசோதகர் ரி.திவ்வியகுமாரனின் வீட்டிலும் திருட்டு இடம்பெற்றுள்ளது. வீட்டின் குளியலறை யன்னலை உடைத்து அதன் ஊடாக நுழைந்த திருடர்கள் அங்கிருந்த கணனி மற்றும் சைக்கிள் உட்பட பெறுமதியான பொருள்கள் பலவற்றையும் திருடிச் சென்றுள்ளனர்.

கொள்ளைச் சம்பவங்களை அடுத்து அப்பகுதியில் திரண்ட பொதுமக்களுடன் அங்கு வந்த இராணுவத்தினரும் இணைந்து கொள்ளையர்களை விரட்டிச் சொன்றனர். தப்பியோடிய கொள்ளையர்கள் விட்டுச் சென்ற கொட்டன்கள், சார்ஜர் லைற்றர், மிக நீண்ட கத்தி மற்றும் இரண்டு சைக்கிள் என்பன கண்டெடுக்கப்பட்டன.

இக்கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக யாழ். மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பில் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-02-25)

# பட்டிவலைகளைக் கரைக்கு கொண்டு வருகிறார்கள் யாழ்.நகர மீனவர்கள்

குருநகர், ஜூன் 5

யாழ்.குடாக்கடலில் குருநகர் இறங்குதுறையில் இருந்து கிழக்கு புறமாக கடலில் இடப்பட்டிருந்த பட்டிவலைகளை கரைக்கு கொண்டுவருமாறு படையினர் மீனவர்களைப் பணித்துள்ளனர். அதனைத் தொடர்ந்து குருநாகர், பாஷையூர் கடற்றொழிலாளர் மேற்கூறிய உபகரணங்களை கொண்டுவரும் முயற்சியில் கடந்த சில தினங்களாக ஈடுபட்டிருந்தனர்.

சிறுத்தீவுக் கரையில் கடந்த வாரம் நடைபெற்ற தாக்குதலைத் தொடர்ந்து இக் கடற்பரப்பில் பட்டிவலைத் தொழிலில் ஈடுபடும் மீனவர்களை இத் தொழிலைச் செய்ய வேண்டாமென படையினர் மறைமுகமாக அறிவுறுத்தி வருவதாகச் சொல்லப்படுகிறது. இதனால் அப்பகுதியில் மீன்பிடிக்குத் தடை விதிக்கப்பட்டுவிடுமே என்ற அச்சம் அப்பகுதி மீனவர் மத்தியில் நிலவுகிறது.

(அ-51)

# சங்கரத்தையில் செவ்வாய் இரவு கொள்ளை வாள்கள், கத்திகளுடன் சென்றோர் அட்டகாசம்

சங்கானை, ஜூன் 4

சங்கரத்தை, செல்லத்துரை வீதியில் நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) இரண்டு வீடுகளில் பெரும் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றன.

வாள்கள், கத்தி, பொல்லுகளுடன் முகங்களைக் கறுப்புத்துணியால் மறைத்துக் கொண்டு சென்ற ஆறு பேர் இந்தக் கொள்ளைகளில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து அறியப்படுவதாவது:

செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 11.30 மணியளவில் குடும்ப விவரம் பார்வையிட வேண்டும் எனக் கூறி கொள்ளையர்கள் வீட்டு யன்னல், கண்ணாடி, மின் விளக்குகளை உடைத்து வீட்டாரை எழுப்பியுள்ளனர்.

கைகளில் இரண்டு வாள்கள், கத்தி, பொல்லுடன், கறுப்புத்துணியால் முகத்தை மறைத்து வந்த ஆறு பேர் வீட்டாரை அச்சுறுத்தி அங்கிருந்த நகைகள், தாலிக்கொடி உட்பட சகலநகைகளையும் (சுமார் 30 பவுண்) நகைகள், 2கையடக்கத் தொலைபேசி, 4 கைக் கடிகாரங்கள் போன்ற வற்றோடு, உரிமையாள ரின் சேர்டில் அவரது அடையாள அட்டை யுடன் இருந்த 20,000 ரூபா பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர். அடையாள அட்டை காலையில் வீதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

டாக்டர் செல்லத்துரை வீதியில் வசித்து வரும் ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரது வீட்டிலேயே இக் கொள்ளை இடம்பெற்றுள்ளது. இதேவேளை அயல் வீட்டில் மின் விளக்கு எரிவதைக் கண்டு அங்கு சென்று முன்கதவை உடைத்து உட் புகுந்து அங்கும் பெண்கள் காதில் அணிந்திருந்த தோடுகள், மோதிரங்கள் உட்பட சுமார் 5 பவுன் நகைகளையும் கையடக்க தொலைபேசி ஒன்றையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

கொள்ளைகள் நடத்தப்பட்ட வேளையில் 7, 8 பேர் வரை வீட்டைச் சுற்றியுள்ள பாதையில் நின்றதாகவும் சொல்லப்படுகிறது.வட்டுக்கோட்டை பொலிஸார் நேரில் சென்று விசாரணை மேற்கொண்டனர். (அ-28)

## சங்கானைக் கோட்ட தமிழ்த்தினப் போட்டிகள் இன்று

சங்கானைக் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடை பெற்றுவரும் தமிழ்த் தினப்போட்டிகளின் இறுதிப்போட்டிகள் வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரியில் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

சங்கானைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் துரை எங்கரசு தலைமையில் நடைபெறும் போட்டிகள் உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் நடுவர்களாகக் கடமையாற்றுவார்கள்

# திறந்த பல்கலைக்கழக அனுமதி பெற்றோருக்கு

குருநகர், ஜூன் 5

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொறியியல் கற்கை நெறிகளுக்கு அனுமதிக் கடிதங்கள் கிடைக்கப் பெற்ற மாணவர்கள் அனைவரையும் இன்று 5ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் யாழ்.திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. அவர்களைப் பதிவு ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு இப் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர் ஒருங்கிணைப்புக்குழு கேட்டுள்ளது. (அ-51)

# தீவக வலய அதிபர்கள் கருத்தரங்கு இன்று

வேலணை, ஜூன் 5

தீவக ஆசிரியர் வள நிலையத்தில் அதிபர்களுக்கான உலக உணவுத்திட்டக் கருத்தரங்கு இன்று காலை நடைபெற உள்ளது. அனைத்துப் பாடசாலை அதிபர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(அ-267)

# திட்ட உதவியாளர் நிதிமுகாமைத்துவப் பயிற்சி இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமைபுரியும்சமூக சேவை அலுவலர்கள் மற்றும் நிகழ்ச்சி திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான ஒரு நாள் அடிப்படை நிதி முகாமைத்துவப் பயிற்சி இன்று நடைபெறும். காலை 8.30 மணிக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இப்பயிற்சி இடம் பெறவுள்ளது என்று சமூகசேவைகள் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலர் ஆ.ஞானவேல் அறிவித்துள்ளார். (அ-203)

# சுகாதார ஊழியருக்கான நடமாடும் சேவை இன்று பருத்தித்துறையில்

குருநகர், ஜூன் 5

யாழ். பிராந்திய சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் நடத்தப்பகடும் நடமாடும் ஊழியர் ஆயுவுச் சேவை இன்று 5ஆம் திகதி வியாழக்கிழமை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இச் சேவையை அங்கு நடத்து வதற்காக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் உட்பட அதிகாரிகள், துறை சார் பணியாளர்கள் அங்கு செல்ல உள்ளார்கள்.

பருத்தித்துறையில் இயங்கும் வைத்திய நிறுவனங்களில் சேவைபுரியும் ஊழியர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக உரிய பொறுப்பு வைத்திய அதிகாரியின் எழுத்துமூல அனுமதியுடன் இச் சேவை யில் கலந்து கொண்டு தீர்க்கப் படாத தமது பிரச்சினைகள் தொடர்பாக வருகை தரும் அதிகாரிகளுடன் கதைத்து தீர்வுகாணமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. பொது மக்கள் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறலாம் எனவும் யாழ் .பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

(அ-51)


## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன ஆசிரியர் மு.சதீஷ் அவர்களின் அன்புச் சகோதரரும் எமது நிறுவன பழைய மாணவருமான

அமரர் மு.சுரேஷ் அவர்களின் மரணச்செய்திகேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

The Express Institute
Irupalai, Kopay.

- அதிபர், ஆசிரியர், ஆளணியினர்.

## Shamrock

ஈச்சமோட்டை, யாழ்.

A/L 2009, 010
அரசியல்: T.கஜன்
இந்து நாக: S.கார்த்திக்
Geo: A.Rajah
Ta,Dra, Log, Chris,Eng
Gr. 1 முதல் O/L வரை
Eng.Medium 6 to 11
Eng. Literature 10+11
புலமைப்பரிசில் 5
சிங்களம் புதிய பிரிவு

## இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோயில்

## தீர்த்த உற்சவம்

காலம்: சர்வதாரி வைகாசி 24 ஆம் திகதி நாளை (06.06.2008) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் தீர்த்தம் நடைபெறும்.

நாதஸ்வர, தவில் கச்சேரி சிறப்பு அம்சமாக நடைபெறும்.

- தீர்த்த உபயகாரர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அதிபர் விஜயலக்ஷ்மி சுகுமார் அவர்களது அன்புத்தாய்

திருமதி

எமிலி மாரிமுத்து

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆறாத் துயர் அடைகிறோம். அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

## தவறிவிட்டது

N.மீனாட்சிசுந்தரம் எனும் பெயரில் உள்ள மோட்டார் சைக்கிள் காப்புறுதிப் பத்திரம், வரி அனுமதிப் பத்திரம், இராணுவ அனும திப் பத்திரம், ராள்சர்போம் என்பன நேற்று 04.05.2008 கொக்குவில் சந்தி- நாச்சிமார் கோவிலடி கலட்டிச் சந்தி - பிறவுண் வீதி சந்தி ஆகிய இடங்களிற்கிடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: சுந்தரம் ஹாட்வெயர்ஸ்

K.K.S.றோட், சுன்னாகம், 276, பிறவுண் வீதி (...)
(யாழ்ப்பாணம், இணுவில்)

## மரண அறிவித்தல்

### இராமநாதன் செட்டியார் தியாகலிங்கம் செட்டியார்

இராமநாதன் செட்டியார் தியாகலிங்கம் செட்டியார் நேற்று (04.06.2008) புதன் கிழமை பிரான்ஸில் காலமானார். அன்னார் சிவநேசத்தின் அன்புக் கணவரும் கலைச்செல்வி, குமரச்செல்வி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
முத்துலிங்கம் ராஜாராம்
TP:021 222 3343, France No: 0033160086412


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போக்குவரத்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாந்தை கிழக்கில் 346 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இதேவேளை ,பூநகரிப் பகுதியில் 235 குடும்பங்கள் தங்களை உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாகப் பதிவு செய்து கொண்டு குடியேறியுள்ளன. இதில் 69 குடும்பங்கள் அரச பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளன. இது தவிர 42 குடும்பங்கள் கிளிநொச்சியில் தங்கியுள்ளன.

இவர்களில் பூநகரியில் தங்கியுள்ளவர்களுக்கு உலர் உணவுகளை வழங்குவதற்கு அரச அதிபர் ஏற்பாடு செய்துள்ளார். வவுனியாவிலிருந்து வன்னிக்குள் நுழையும் லொறிகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**குறைந்த அளவு எரிபொருள்**

வன்னியில் செயற்படும் ஒன்பது சர்வதேச அரச சார்பற்ற அமைப்பு வேண்டுகோள் விடுத்ததை விடவும் குறைவான எரிபொருட்களையே எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்புப் படையினர் அனுமதிக்கின்றனர்.

மே மாதத்திற்கான ஐ.நா. அமைப்புகளுக்குரிய - எரிபொருள் தொகுதிகளுக்கான அனுமதி இன்னமும் வழங்கப்படவில்லை.

**வவுனியா, மன்னாரில் நிச்சயமன்ற நிலைமை**

வவுனியா, மன்னார் பகுதிகளில் நிலைமை நிச்சயமற்றதாக உள்ளது. பொதுமக்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் மத்தியில் பதற்றம் அதிகரித்துக் காணப்படுவதுடன் அவர்கள் உயர்ந்தபட்ச எச்சரிக்கை நிலையில் உள்ளனர். தொடர்ச்சியாக சுற்றிவளைப்புத் தேடுதல்கள் இடம்பெறுகின்றன. நானாட்டானிலிருந்து 22 குடும்பங்கள் இந்தியாவிற்குச் சென்றுள்ளன.

மாந்தை மேற்கைச் சேர்ந்த மக்கள் பாலியாறு மற்றும் கணேசபுரம் பகுதிகளை நோக்கி இடம்பெயரத் தொடங்கியுள்ளனர். சிலர் மன்னாரிலிருந்து கிளிநொச்சிக்கும் தப்பிச் சென்றுள்ளனர்.

**எரிபொருள் தட்டுப்பாடு பொருள்கள் விலையேற்றம்**

மதவாச்சியிலும் உயிலங்குளம் மற்றும் கட்டை அடம்பன், திருக்கேதீஸ்வரம் பகுதிகளிலும் உள்ள சோதனைச் சாவடிகளில் அமுல்படுத்தப்படும் நடவடிக்கைகள் காரணமாக விலை அதிகரிப்பு, எரிபொருள் தட்டுப்பாடு போன்ற கடும் பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் உலர் உணவு விநியோகத்தில் இன்னமும் தாமதம் காணப்படுகின்றது. சில நலன்புரி முகாம்களில் உள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-உ)

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் மீதான விவாதத்தை ஆரம்பித்துவைப்பார்.

நாடாளுமன்றின் புதிய கூட்டத்தொடரின் அங்குரார்ப்பண அமர்வை ஜனாதிபதியே தொடக்கிவைப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி இன்று நாடாளுமன்றம் கூடுகின்றபோதிலும் ஜனாதிபதியால் அமர்வு தொடக்கிவைக்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாலியின்தலைநகர்ரோமில்நடைபெறும் உலக உணவு அமைப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி அங்கு சென்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## காத்தான்குடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழமை நிலை பாதிக்கப்பட்டது தெரிந்ததே.

செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களுள் 14 பேரை பொலிஸார் கைதுசெய்து நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றதில் ஆஜர்படுத்தினர்.

நீதிமன்ற உத்தரவின்படி அவர்கள் 14 பேரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்களை விரட்டிய பொலிஸார் அவர்களிடமிருந்து 121 சைக்கிள்களையும் 07 மோட்டார் சைக்கிள்களையும், கைப்பற்றினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-உ)


வெளிவந்து விட்டது
சுகாதார முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை வழிகாட்டி
பொது அறிவு,நுண்ணறிவு, மொழித்திறன்
ரூபா 120
P.Kamalthasan
பூபாலசிங்கம் புத்தகசாலை

LOGIC
கருத்தரங்கு
முதலாம் அலகுடன் ஆரம்பம்
சனிக்கிழமை 1 மணி
S.S. மனோகரன்
BEACON
யாழ். நகர்

C. C. A. சுன்னாகம்
கணக்கீடு S.S. சீலன்
2009 - Sat, Sun 8 a.m
கம்பனி க/கு
2010 - Sat, Sun 9a.m
தனி வியாபார முடிவுக் க/கு
ஆரம்பம்:- 07.06.2008

A/L General English With Grammar
பொது ஆங்கிலம் இலக்கண விளக்கத்துடன்
(அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுகிறது)
ஆரம்பம் 07.06.2008 (சனிக்கிழமை)
பிரிவு 1 7.15 a.m
பிரிவு 2 1.00 p.m
By:- P.N. சுதர்சன் Dip.in Eng.
DMI, நாவலர் வீதி,யாழ்ப்பாணம்.


## கிழக்கு மாகாண சபையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹஸன் மௌலவி ஏற்றிவைத்தார். இதன் பின்னர் ஆளுநரின் பிரகடனத்தைப் பேரவைச் செயலர் ஆர். தியாகலிங்கம் வாசித்தார்.

இந்த நிலையில் அவைத் தலைவர் தெரிவு இடம்பெற்றது. சபைத் தலைவராக மொஹமது பாயிஸ் தெரிவானார். பிரதித் தலைவராக எம்.கே.டி.எஸ். குணவர்த்தன தெரிவு செய்யப்பட்டார். சபைத்தலைவரின் உரை அடுத்ததாக இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து முதலமைச்சரும் ஏனையோரும் உரையாற்றினர்.

இந்தநிலையில் கிழக்கு மாகாணசபையின் அடுத்த கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறும் எனச் சபையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அமர்வில் எதிர்க்கட்சிகள் தரப்பில் ஜே.வி.பி. உறுப்பினரும் தமிழர் ஜனநாயக விடுதலை முன்னணியின் உறுப்பினரும் மாத்திரமே பங்கேற்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் இந்த அமர்வில் பங்கேற்கவில்லை. இதேவேளை, கிழக்கு மாகாண சபையின் முதல் அமர்வை முன்னிட்டு நேற்று திருகோணமலை உட்துறைமுக வீதிப் பிரதேசத்தில்பலதத பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (உ)

## மோட்டார் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைத்தளம், மோட்டார் ஷெல் ஏவுதளம் மற்றும் வெடிபொருள் களஞ்சியம் என்பனவற்றில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன. 2 மணிநேரத்தாக்குதலில் வெடிபொருள் களஞ்சியம் தீப்பற்றி வெடித்துச்சிதறி எரிந்தது. பிற்பகல் வரை வெடி பொருட் கள் வெடித்து எரிந்துள்ளன.

இதனிடையே படைத்தளத்தில் இருந்த படையினருக்கும் பெருமளவில் உயிரிழப் புக்கள் ஏற்பட்டுள்ளன.

**படைத்தரப்பு தகவல்:**

பூநகரி, கல்முனைப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆட்லறி தளங்களை இலக்குவைத்து நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவிலும்

முகமாலை முன்னரங்க நிலையில் இருந்து சுமார் 10 கிலோமீற்றர் தென் கிழக் கே உள்ள சோரன் பற்றுப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆட்லறித் தளங்கள் மீது நேற்றுப் பிற்பகல் 1.35 மணியள விலும் விமானப்படையினரின் ஜெட் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின .

(அ-02)

## தெஹிவளைப் பகுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கு களுபோவில வைத்தியசாலையில் உடன் சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டது. மேற்படி வெடிகுண்டைக் கொண்டுவந்த நபரை அப்பகுதி மக்கள் கண்டு, சந்தேகமுற்று, அதுகுறித்து ஏனையோரை எச்சரிக்கும் விதத்தில் சத்தம் எழுப்பினர்.

அதனால் அக்குண்டை ரயில் பாதையில் அந்நபர் போட்டுவிட்டு ஓடித் தப்பினார் என்றும் - அதன் பின்னரே அக்குண்டு வெடித்தது என்றும் - சில தகவல்கள் தெரிவித்தன.

இக்குண்டு வெடிப்புத் தொடர்பாக ஒருவரைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர் என்றும் கூறப்பட்டது. இக்குண்டுவெடிப்புத் தொடர்பாக விசாரணை நடத்திவரும் பொலிஸார் முக்கிய சந்தேக நபருடையது என்று தெரிவித்து ஒருவரின் படத்தையும் ஏனைய சில விவரங்களையும் வெளியிட்டிருக்கின்றனர். ஜதீஸன் பாலசுப்பிரமணியம், பிறந்த திகதி:- 1978.08.20, கடவுச் சீட்டு இல:- 1898438, தேசிய அடையாள அட்டை இல:- 782413538 தி, வத்தளை - என்று மேற்படி சந்தேக நபர் தொடர்பாகப் பொலிஸார் தகவல் வெளியிட்டிருக்கின்றனர். (அ-உ)

## மரண அறிவித்தல்



### அமரர் சின்னத்தம்பி சின்னராசா (செல்வராசா)

புதிய செம்மணி வீதி ஞானவைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கட்டப்பிராய், 3ஆம் கட்டையைவசிப்பிடமாகவும்கொண்ட சின்னத்தம்பி சின்னராசா(செல்வராசா) 03.06.2008 செவ்வாய்க்கிழமை அன்று காலை சிவபதம் அடைந்தார்.

அன்னார்காலஞ் சென்றசின்னத்தம்பி - சின்னத்தங்கம் தம்பதிகளின் மூத்த புதல்வனும்,சின்னையா-கனகம்மா தம்பதிகளின்அன்புமருமகனும் வசந்தாவின் அன்புக் கணவரும் ராஜேஸ்கண்ணன் (சுவிஸ்), ரூபன் (இத்தாலி), பிரதீபன்(இந்தியா), ஞானலோஜினி, ஞானரூபி (செங்குந்தா இந்தக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவரத்தினம் (டென்மார்க்), கிருபாகரன்(சுவிஸ்), சத்தியமூர்த்தி(சுவிஸ்), உதயராணி (பிரான்ஸ்), பிறேமராசா(பிரான்ஸ்), இரஞ்சிதகுமார் (தென்ஆபிரிக்கா), சுரேஸ்குமார்(டோகா), சுதர்சன்(கொழும்பு), தர்மராசா (கல்வியங்காடு), சந்திரமோகன்(கல்வியங்காடு) ஆகியோரின் அருமை மைத் துனரும், அன்னலட்சுமி, மாலதி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரியா(சுவிஸ்), மாலினி(இத்தாலி), சுபாகரன் (இந்தியா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்இன்று(05.06.2008)வியாழக்கிழமை பிப 3மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக் காக பூதவுடல் செம்மணி இந்த மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தருமராசா
(மைத்துனர்)

3ஆம் கட்டை, கட்டப்பிராய்,
இருபாலை தெற்கு. (75129)


நீங்களும் கணனி பட்டதாரியாகலாம்
O/L / A/L தடையல்ல
இலங்கை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் உடையது
யாழிலேயே கற்கும் வசதி
பகுதிநேர வெளிவாரி கற்கைநெறி
16.05.2007 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த பட்டமளிப்பு வைபவத்தின் போது சிறப்பு விருது பெற்ற நிறுவனம்

விண்ணப்பபடிவங்களிற்கும் பதிவுகளுக்கும்
06-06-2008 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS
Supported By UNDP/JRRP

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52,ஸ்ரான்லி வீதி, யாழ்.
பௌதிகவியல் திரு.S.சுரேன்
A/L DAY CLASS
தூரித மீட்டல் வகுப்புகள்
Sat.Sun
09-10 12-1.00
PAPER CLASS
Tues, Thurs 12-1.00
A/L 2009-குடித்தொகை
Sat, Sun 11-12
A/L 2010 தேர்ப்பா ர்
Sat, Sun 8-9
ஆரம்பம் 07.06.08


## ஹக்கீம், ஹசனலி, பஷீர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டனர்.

நேற்றுக்காலை கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தயாகமகே, சின்ன மஹ்ரூப், எம்.எஸ்.தௌபீக், அரசரட்ணம் சசிதரன், பஷீர் சேகுதாவூத், ஹஸன் அலி, அப்துல் மஜீத், அருணாசலம் பரசுராமன், ரசாக் ஜவாத், கலபதி, ஜெமீல், அமீர்தீன், மாசிலாமணி மற்றும் என்.வரதர் ஆகிய 15 மாகாண சபை உறுப்பினர்களுமே சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். (அ-சி)

## வெள்ளம் வடிகிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடியத் தொடங்கியுள்ளது.

எனினும் சீரற்ற காலநிலை தொடரும் அபாயம் உள்ளதாக எச்சரித்துள்ள வானிலை அவதான நிலையம், இதன் காரணமாக நிவாரணப் பணிகள் பாதிக்கப்படலாம் என்றும் தெரிவித்துள்ளது.

ஒரு வாரகால மழை காரணமாக இடம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானவர்கள் அரச பாடசாலைகளிலும், பௌத்த விகாரைகளிலும் தங்கியுள்ளனர். அரசு இரண்டு கோடி ரூபாவை உடனடி நிவாரண பணிகளுக்கு வழங்கியுள்ளது.(சி)

## யாழ் மாவட்டத்திற்கான 'இஸற் ஸ்கோர்' விவரம்

யாழ்ப்பாணம், ஜூன் 05

கடந்த வருடம் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய யாழ். மாவட்ட மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான 'இஸற்' வெட்டுப் புள்ளி விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| MEDICINE | 1.8814 |
| DENTAL SURGERY | 1.8677 |
| VETERINARY SCIENCE | 1.7913 |
| AGRICULTURE | 1.0484 |
| FOOD & NUTRITION | 1.5594 |
| BIOLOGICAL SCIENCE | 0.9712 |
| APPLIED SCIENCES (BIO.SC) | 0.9348 |
| ENGINEERING (MPR) | 1.8468 |
| ENGINEERING (EM) | 1.7871 |
| ENGINEERING (TM) | 1.7607 |
| QUANTITY SURVEYING | 1.7753 |
| COMPUTER SCIENCE | 1.7094 |
| PHYSICAL SCIENCE | 1.0473 |
| SURVEYING SCIENCE | 1.5728 |
| APPLIED SCIENCES (PHY.SC) | 0.9940 |
| MANAGEMENT | 1.2621 |
| ESTATE MGT.& VALUATION | 1.5533 |
| COMMERCE | 1.2308 |
| ARTS* | 1.2890 |
| ARTS (SP) / MASS MEDIA* | 1.2456 |
| ARTS(SAB) - A* | 1.2832 |
| MANAGEMENT STUDIES (TV) - A | 1.2537 |
| ARCHITECTURE | NQC |
| DESIGN | 1.1552 |
| LAW | 1.6960 |
| INFORMATION TECHNOLOGY | 1.7485 |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY | 1.4473 |
| PUBLIC MANAGEMENT (SPECIAL) | 1.7721 |
| COMMUNICATION STUDIES* | 1.2583 |
| TOWN & COUNTRY PLANNING | 1.7034 |
| PEACE & CONFLICT RESOLUTION* | 1.6694 |
| AYURVEDIC MEDICINE & SURGERY* | 1.0325 |
| UNANI MEDICINE & SURGERY* | 0.8578 |
| FASHION DESIGN & PRODUCT DEVELOPMENT | NQC |
| FOOD SCIENCE & TECHNOLOGY | 1.7564 |
| SIDDHA MEDICINE* | 0.5934 |
| NURSING | 1.3013 |
| INFORMATION & COMMUNICATION TECHNOLOGY | 1.4472 |
| AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT | 1.6152 |
| MANAGEMENT STUDIES (TV) - B | 1.2881 |
| ARTS (SP) / PERFORMING ARTS* | 1.0616 |
| ARTS(SAB) - B* | 1.5022 |
| MUSIC (SWAMI VIPULANANDA) | - 0.2889 |
| DANCE (SWAMI VIPULANANDA). | - 0.0914 |
| INFORMATION & COMMUNICATION TEC (RAJARATA) | NQC |
| INFORMATION & COMMUNICATION TEC (VAVUNIYA) | 0.5539 |
| HEALTH PROMOTION | 1.2376 |
| PHARMACY | 1.6565 |
| MEDICAL LABORATORY SCIENCES | 1.6284 |
| RADIOGRAPHY | 1.6631 |
| PHYSIOTHERAPY | 1.7498 |
| ENVIRONMENTAL CONSERVATION & MANAGEMENT | 0.9696 |
| FACILITIES MANAGEMENT | 1.5724 |
| TRANSPORT & LOGISTICS MANAGEMENT | 1.7512 |
| MOLECULAR BIOLOGY AND BIOCHEMISTRY | 1.8466 |
| INDUSTRIAL STATISTICS & MATHEMATICAL FINANCE | 1.6321 |
| STATISTICS & OPERATIONS RESEARCH | 1.5632 |
| COMPUTATION & MANAGEMENT | 1.5282 |
| FISHERIES & MARINE SCIENCES | 1.2689 |
| ISLAMIC STUDIES* | 1.2114 |
| SCIENCE & TECHNOLOGY | 1.0295 |
| COMPUTER SCIENCE & TECHNOLOGY | 1.3423 |
| ENTREPRENEURSHIP & MANAGEMENT | 1.1962 |
| ANIMAL SCIENCE | 0.9158 |
| MUSIC (RAMANATHAN ACADEMY) | 0.3247 |
| DANCE (RAMANATHAN ACADEMY) | 0.2616 |
| ART & DESIGN | 0.2521 |
| DRAMA & THEATRE | 0.9397 |
| VISUAL ARTS | - 0.0915 |
| EXPORT AGRICULTURE | 0.8530 |
| TEA TECHNOLOGY & VALUE ADDITION | 0.9819 |
| INDUSTRIAL INFORMATION TECHNOLOGY | 1.2804 |
| MINERAL RESOURCES & TECHNOLOGY | 1.0892 |
| BUSINESS INFORMATION SYSTEMS (SPECIAL) | 1.5505 |
| OPERATIONS & TECHNOLOGY MANAGEMET (SPECIAL) | 1.3514 |
| INFORMATION TECHNOLOGY FOR MANAGEMENT STUDIES | 0.7107 |
| COMPUTING & INFORMATION SYSTEMS | NQC |
| PHYSICAL EDUCATION | NQC |
| SPORTS SCIENCES & MANAGEMENT | NQC |
| SPEECH & LANGUAGE THERAPY | NQC |
| ARABIC LANGUAGE* | 0.8589 |

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org